
துல்ஹஜ் சிறப்பு மலர்

# றப்பானி

வெளியீடு – 02

அபாபீல் வெளியீடு


HAJJ GUIDE
Enter State of Ihram
Tawaf al-Qudoom
Sa'i between Safa and Marwa
Spend Time in Arafat
Jamarat al-Aqaba
Shave/ Trim Hair
Farewell Tawaf

## பிரதம ஆசிரியர்

முபர்றிஜ் நயீம் (நளீமி)

## துணை ஆசிரியர்கள்

அப்துர்ரஹ்மான் ஸலீம் (நளீமி)

உஸ்மான் அமீர் அமானுல்லாஹ் (நளீமி)

அபீக் அஹமத் காரியப்பர் (நளீமி)

## மேற்பார்வை

உஸ்தாத் ரிஷாத் நஜிமுத்தீன் (நளீமி)

## சஞ்சிகை வடிவமைப்பு

ஆஷிக் இர்பான் (NDT in Teaching)


**தொடர்புகளுக்கு :**

+94 77 52 31 961 | mufarij012@gmail.com


இச்சஞ்சிகையில் வரும் ஆக்கங்களுக்கு அவற்றை
எழுதியவர்களே பொறுப்பாவர்


2023 தொகுதி நளீமீக்களால் (அபாபீல்) இச்சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

# உள்ளே...


01 உள்ளத்திலிருந்து...
பிரதம ஆசிரியர்

02 அல் குர்ஆனில் ஹஜ் – அறிமுகம்
அஷ்–ஷெய்க் அப்துர்ரஹ்மான் (நளீமி)

03 அல் – ஹஜ்ஜு அரபா
அஷ்–ஷெய்க் சதீம் (நளீமி)

04 ஐயமும் தெளிவும்
அஷ்–ஷெய்க் மாஜிர் (நளீமி)

05 ‘கஃபா’ எனும் அடையாளம்
அஷ்–ஷெய்க் உஸ்மான் (நளீமி)

06 ஆலு இப்றாஹீம்
அஷ்–ஷெய்க் நாதிர் நூறி (நளீமி)

07 எமக்கானது...
அஷ்–ஷெய்க் முபர்றிஜ் (நளீமி)

08 உவகைமிகு பெருநாள்...
அஷ்–ஷெய்க் சல்ஜி ( நளீமி )

09 சர்வதேச முஸ்லிம் மாநாட்டை நோக்கி
அஷ்–ஷெய்க் சறூஸ் (நளீமி)

10 சில இரகசியங்கள்
அஷ்–ஷெய்க் அப்ழல் (நளீமி)

11 ஹஜ் முகவர்கள்
அஷ்–ஷெய்க் அப்துல்லாஹ் (நளீமி)

12 தெளிவான வெற்றி
அஷ்–ஷெய்க் சகி அஹமட் (நளீமி)

13 ஹஜ்ஜும் மறுமை நாளும்
அஷ்–ஷெய்க் அப்துர்ரஹ்மான் (நளீமி)



பிரதம ஆசிரியர்

# உள்ளத்திலிருந்து...

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

அன்பார்ந்த வாசகர்ப் பெருமக்களே, றப்பானியின் இரண்டாவது வெளியீட்டின் வாயிலாக மீண்டும் உங்களைச் சந்திப்பதில் அகமகிழ்வடைகின்றேன். இந்த இதழுக்குள் நீங்கள் நுழைய முன்னர் எனது உள்ளத்திலிருந்து ஒரு சில வார்த்தைகளை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஹஜ் என்றால் எமது உள்ளத்தில் முதலாவதாக உதிப்பது 'கஃபா' தான். கஃபா என்பது வெறுமனே கற்களைக் கொண்டு கட்டப்பட்ட வெற்றுச் சுவர்கள் அல்ல. மாறாக, அது இறைவனை நினைவூட்டும் ஒரு அடையாளம். கஃபாவை நோக்கிப் பயணிக்கும் ஹஜ்ஜாஜிகள் யாவரும் இறைவனை நோக்கியே பயணிக்கின்றனர். அவர்கள் எதிர்பார்ப்பது எல்லாம் இறை திருப்தியை மட்டுமே. கஃபாவைக் கண்டதும் ஒவ்வொரு மனிதனும் உணர்வுகள் ததும்ப 'லப்பைக், அல்லாஹும்ம லக லப்பைக்' என்று மொழிகின்றான். அதாவது 'இறைவா, உனது அழைப்புக்கு நான் பதில் சொன்னேன்' என்பதுவே அதனது பொருளாகும். ஆகவே ஹஜ் என்பது இறைவனை நோக்கிய ஒரு யாத்திரையாகும்.

ஹாஜி தனது பயணத்துக்கான கட்டுச் சாதத்தைத் தயார் செய்யும் போது 'தக்வா' எனும் கட்டுச் சாதத்தை எடுத்துக்கொள்ளும்படி குர்ஆன் வலியுறுத்துகின்றது. ஹஜ்ஜாக இருந்தாலும், உம்ராவாக இருந்தாலும், உழ்ஹியாவாக இருந்தாலும் ஏனைய இன்னோரன்ன என்ன வணக்க வழிபாடாக இருந்தாலும் இறைவனின் பால் அதன் பெறுமதி 'தக்வாவைக்' கொண்டே தீர்மானிக்கப் படுகிறது.அரபாவும், முஸ்தலிஃபாவும், மஃஷரையும், விசாரணையையும், கூலி

வழங்குதலையும் ஞாபகமூட்டுகின்றன. ஹஜ்ஜுக்காகப் புறப்படும் ஒவ்வொரு மனிதனும், உலகைப் பிரிந்து மறுமை வாழ்வை நோக்கிப் பயணிக்கும் உணர்வுடன் புறப்பட வேண்டும்.

இன்னும் ஹஜ்ஜின் ஒவ்வொரு அசைவிலும் இறைவன் நினைவு கூரப்படுகிறான். ‘ஹஜ் என்பது அரபாவாகும்’ என்பது நபி மொழி. ‘அரபா என்பது திக்ரும், துஆவும்’ என்பது மற்றுமொரு நபி மொழி. ஆக ஹஜ் என்பது சதாவும் இறைவனை நினைவுகூர்தலாகும். மேலும் ஹஜ் என்பது துஆ ஆகும். ‘ரப்பனா ஆத்தினா பித்துன்யா ஹசனதன் வபில் ஆகிரதி ஹஸனதவ் வகினா அதாபன் நார்’ எனும் குர்ஆனிய வசனத்தை ஒவ்வொரு ஹாஜியும் மீண்டும் மீண்டும் ஓதி துஆ செய்வதன் மூலம் இம்மையிலும் மறுமையிலும் தனக்கு மிகச் சிறந்ததை தருமாறு இறைவனிடம் மன்றாடுகின்றார்.

இன்னும் ஹஜ்ஜாஜிகள் இஹ்ராம் அணிந்து விட்டால் பாவங்களை விட்டும் தூரமாகி விட வேண்டும். பொய், புறம், வாதாட்டம், வீண் சண்டைகளில் ஈடுபடுவது மற்றும் ஒழுக்கக்கேடான விடயங்களில் ஈடுபடுவது போன்ற விடயங்கள் அவர்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு ஹாஜியும் இறைவனை நினைவு கூர்வதன் மூலமும் பாவங்களை விட்டும் தூரமாகி இருப்பதன் மூலமும் கடுமையான ஆன்மீகப் பயிற்சிக்கு உட்படுத்தப்படுகின்றான். இக்கடுமையான பயிற்சியின் மூலம் புடம் போடப்படும் மனிதன் பரிசுத்தமான மனிதனாய் ஆகுகின்றான். ஆகையால் ஒவ்வொரு ஹாஜியும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜை முடித்துவிட்டு வீடு திரும்பும் போது அன்றுப் பிறந்த பாலகன் போல எந்த வித பாவமும் அற்று பரிசுத்தமான புது மனிதனாக வீடு திரும்புகின்றார்.

தொலைபேசி இன்றைய நவீன யுகத்தில் மனிதன் பெற்றிருக்கும் மகத்தான ஒரு வரமும் மிக மோசமான ஒரு சாபமும் ஆகும். இதனை மனிதன் தான் செல்லும் இடத்துக்கெல்லாம் சுமந்து செல்கிறான். தொலைபேசிகள் எந்த அளவு எமக்கு பயனளிக்கின்றதோ, அதேயளவு அவை எம்மைத் திசை திருப்பவும் செய்கின்றன. முடியுமானவரை ஹாஜிகள் தொலைபேசியை விட்டும் தூரமாகி இருப்பது அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவை நிச்சயமாக வலுப்படுத்தும். சில போது புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பகிர்வதானது முகஸ்துதிக்கும், பெருமைக்கும் வழி வகுக்கக் கூடும். அவ்வாறு முகஸ்துதியையும், பெருமையையும் அவை தூண்டுமாக இருந்தால் ஹாஜிகள் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுவதை விட்டும் தவிர்ந்திருக்க வேண்டும்.

இன்னும் துல்ஹஜ்ஜுடைய முதல் பத்து நாட்கள் குர்ஆனில் சிலாகித்துக் கூறப்பட்ட நாட்களாக இருக்கின்றன. சூரா பஜ்ரின் இரண்டாவது வசனமானது துல்ஹஜ்ஜின் முதல் பத்து இரவுகளையே தான் குறிப்பிடுவதாக பல்வேறு தப்ஸீர் ஆசிரியர்கள் விளக்கமளித்துள்ளார்கள். ரமழானுடைய இறுதிப் பத்து தினங்கள் எவ்வாறு மிகவும் பெறுமதிமிக்கவையாக இருக்கின்றதோ அதேபோல துல்ஹஜ்ஜின் ஆரம்பப் பத்து நாட்களும் அவ்வளவு முக்கியமானவையாக இருக்கின்றன. ஆகவே இந்த பத்து நாட்களில் மிக அதிகமாக இறைவனை நாம் நெருங்க முயற்சிக்க வேண்டும்.

துல்ஹஜ்ஜின் விஷேட அம்சங்களுள் ஒன்றுதான் 'உழ்ஹியா' எனும் வணக்கமாகும். "குர்பானியின் மாமிசமோ, அவற்றின் இரத்தமோ அல்லாஹ்வை அடைவதில்லை. எனினும் உங்களின் இறையச்சமே அவனை அடைகிறது" எனும் ஸூரா ஹஜ்ஜின் 22வது வசனம் தக்வாவின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. மேலும், மிருகங்களை அறுக்கும் போது அழகிய முறையில் அறுத்துப் பலியிடுமாறு கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழிகாட்டியுள்ளார்கள். இறைவனுக்காக மிருகங்களை அறுக்கும் போது நாட்டு சட்ட திட்டங்களை மதித்தவர்களாகவும், ஏனைய மதத்தவர்களுக்கு இடைஞ்சல் தராதவர்களாகவும், ஜீவகாருண்யத்தைப் பேணுபவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

ஆக, அன்பின் வாசகர்களே, எனது உள்ளத்தில் தோன்றிய ஒரு சில விடயங்களை மிகவும் சுருக்கமாக முன்வைத்துள்ளேன். இந்த றப்பானியின் இரண்டாவது வெளியீட்டில் துல்ஹஜ் மாதத்தோடு சம்மந்தப்பட்ட ஒரு சில தலைப்புக்கள் விலாவாரியாக அலசப்பட்டுள்ளன. இந்த ஆக்கங்களை முழுமையாக வாசிப்பதன் மூலம் உங்களது உள்ளத்தில் ஏதோவொரு தாக்கம் ஏற்படும் என நிச்சயமாக நான் நம்புகிறேன். இந்த சஞ்சிகையின் வெளியீட்டுக்குப் பின்னால் பல்வேறு நபர்களின் உழைப்பு இருக்கின்றது. விஷேடமாக உஸ்தாத் ரிஷாத் நஜிமுத்தீன் அவர்கள் தனது வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் எமது முதலாவது மற்றும் இரண்டாவது இதழ்களின் வெளியீட்டுக்கு உறுதுணையாக இருந்தார். யாரெல்லாம் றப்பானியோடு கரம் கோர்த்தார்களோ அவர்களுக்கு அல்லாஹ் பூரணமான கூலியை வழங்குவானாக.

முழுமையாக இறைதிருப்தியை நாடி செய்யப்படும் ஒரு சிறிய பணி இது. அல்லாஹ் இதனைப் பொருந்திக் கொள்வானாக. இதனது குறைகள் யாவும் எம்மையும் நிறைகள் யாவும் இறைவனையும் சாரும்.

பிரதம ஆசிரியர்
*Mufarij Nayeem*
2024. 05. 28



அஷ்–ஷெய்க் அப்துர் ரஹ்மான் ( நளீமி )

# அல் குர்ஆனில் ஹஜ் – ஓர் அறிமுகம்

வரலாற்றில் தப்ஸீர் கலை என்பது பல வளர்ச்சிகளைக் கண்டு வந்துள்ளது. அதன் அடிப்படையில், நவீன காலத்திலும் தப்ஸீர் கலை வளர்ச்சிக் கட்டங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அவற்றுள் ஒன்று, தலைப்பு வாரியாக அல்குர்ஆனை அணுகுதல் என்பதாகும். அல்குர்ஆனின் வசனங்களை விளக்கும் அணுகுமுறைகளில் தலைப்பு வாரியாக விளக்கும் ஒழுங்கு நபி (ஸல்) அவர்களது காலம் முதலே இருந்து வந்த ஒன்றாகும். ஆனாலும் ஹிஜ்ரி 14ஆம் நூற்றாண்டிலேயே இது ஒரு தனிக்கலையாக அறிமுகம் செய்யப்பட்டது. அல்–அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட போதே இக்கலை அறிமுகமானது.[1]

தலைப்பு வாரியாக அல்குர்ஆனை அணுகுதல் என்பதன் வரைவிலக்கணம் “அல்குர்ஆனில் ஆயத்துக்கள் அமைந்திருக்கின்ற ஒழுங்குக்கு ஏற்ப அதனை விளக்கிச் செல்லாமல் குறிப்பிட்ட தலைப்புக்களாக அல்குர்ஆன் வசனங்களை ஒழுங்குப்படுத்தி அவற்றை விளக்குதல் ஆகும். இதன் மூலம் குறித்த ஒரு விவகாரத்தில் அல்குர்ஆனுடைய நிலைப்பாடு என்ன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இந்த அணுகுமுறையானது ஏனைய அல்குர்ஆன் சார் கலைகளையும் உள்வாங்கி அல்குர்ஆனுக்கான அதன் பங்களிப்பை செய்கிறது”.[2] இதன் வளர்ச்சி கட்டமாக இவ்வொழுங்கில் தொகுக்கப்பட்ட அல்குர்ஆனுக்கான கலைக் களஞ்சியங்களையும் இன்று எம்மால் கண்டுகொள்ள முடிகிறது.[3]

இப்பின்னணியிலேயே “அல்குர்ஆனில் ஹஜ் – ஓர் அறிமுகம்” என்ற தலைப்பையும் நோக்க இருக்கின்றோம். ஹஜ் என்ற கிரியையானது இஸ்லாத்தில் நான்காவது

1. முஸ்லிம். முஸ்தபா, மபாஹிஸ் பீ தப்ஸீர் அல்-மவ்ழூஈ, தாருல் கலம், 2007, ப: 17
2. பத்ஹுல்லா சஈத். அப்துஸ்ஸத்தார், அல்-மத்ஹல் இலத் தப்ஸீர் அல்-மவ்ழூஈ, ப: 18
3. (https://modoee.com/show-letters) இந்த இணைப்பு பல தலைப்புக்களின் கீழ் அல்குர்ஆனுடைய வசனங்கள் தொகுக்கப்பட்டு அவற்றுக்கான சுருக்கமான விளக்கங்களும் தரப்பட்டுள்ள இணையத் தளத்திற்கானது. இதில் 36 பாகங்களில் 354 தலைப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. “அல்குர்ஆனில் ஹஜ்“ என்ற தலைப்பையும் கண்டு கொள்ளலாம். (அரபு மொழி தெரிந்தவர்கள் இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம்)

கிரிகையாகும். அல்லாஹ்வே வரையறைகளை கூறி கடமையாக்கிய வணக்க வழிபாடுகளில் இறுதியானது ஹஜ் ஆகும். இது ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு கடமையாக்கப்பட்டது என்பது பலமான கருத்தாகும். பயணங்களினதும் சுற்றுலாக்களினதும் உலகில் ஹஜ் ஒரு தனித்துவமான பயணமாக விளங்குகிறது. ஒரு முஸ்லிம் தனது உடலையும் உள்ளத்தையும் அல்லாஹ் அல்-குர்ஆனில் சத்தியம் செய்த பாதுகாப்பான பிரதேசத்தை நோக்கி நகர்த்துவதே ஹஜ் என அறியப்படுகிறது.[4]

அல்-ஹஜ் என்ற சொல்லும் அதனோடு தொடர்புபட்ட சொற்களுமாக அல்குர்ஆனில் 12 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஹஜ் என்ற விடயதானம் குறித்து 33 தடவைகள் அல்-குர்ஆன் பேசியிருக்கின்றது.[5] சூரா பகரா, சூரா ஆல இம்ரான், சூரா மாயிதா, சூரா தவ்பா, சூரா ஹஜ் போன்ற சூராக்களில் ஹஜ் குறித்த வசனங்களைக் கண்டுகொள்ள முடிகிறது. அல்-குர்ஆனில் ஹஜ் என்று பெயரிலேயே ஒரு சூரா இருப்பது குறிப்பிடத்தக்கது. இது அல்லாஹ் இஸ்லாத்தினுடைய மிகப்பெரும் தூண்களில் ஒரு தூணான ஹஜ் என்ற வணக்க வழிபாட்டிற்கு கொடுத்திருக்கக்கூடிய முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.[6]

இமாம் இப்னு ஆஷூர் (ரஹ்) அவர்கள் 'ஹஜ்' குறித்து குறிப்பிடும் போது: ஜாஹிலிய்யாக்கால மக்கள் ஹஜ் என்ற வணக்க வழிபாட்டில் உட்புகுத்திய விடயங்களை மாற்றி ஹஜ்ஜினுடைய நிலைமைகளையும் விளக்கங்களையும் விவரிக்கும் போது அல்லாஹ் இந்த மகத்துவம் மிக்க ஹஜ் வணக்க வழிபாட்டிற்கு குறிப்பாக கவனம் செலுத்தியிருக்கின்றான் என்பது வெளிப்படுகிறது".[7]

பிரத்தியேகமாக அல்குர்ஆன் தனது ஆயத்துக்களை கோர்வை செய்திருக்கின்ற ஒழுங்கின் நுட்பத்தையும் அழகையும் காட்டுகின்ற விதமாக சூரா பகராவில் ஹஜ் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு அமைந்திருக்கின்றது. அது ரமழான் மாத நோன்பைத் தொடர்ந்து வருகின்ற மாதங்களில் ஹஜ் கடமையாக்கப்பட்டிருப்பதைப் போன்று சூரா பகராவில் நோன்பு குறித்து பேசுகின்ற வசனங்களைத் தொடர்ந்து ஹஜ் குறித்துப் பேசப்படுகின்றது. இது சூரா பகராவில் 183ம் வசனத்திலிருந்து 203ம் வசனம் வரை நீண்டு செல்கிறது.[8] எனவே இவ்வாறு பார்க்கின்ற பொழுது அல்குர்ஆனில் ஹஜ் என்ற தலைப்பு ஆழமான ஆய்வையும் நீண்ட கட்டுரையையும் வேண்டி நிற்கின்ற ஒரு தலைப்பு என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

---

4. கர்ழாவீ, யூஸுப், அல்-இபாதா பில் இஸ்லாம், மக்தபா வஹ்பா, 1995, ப: 296
5. அறிஞர் குழாம், மவ்ஸூஅது தப்ஸீர் அல்-மவ்ழூஈ லில் குர்ஆனில் கரீம், பாகம்: 11, ப:303
6. அல்-குவய்லி, முஹம்மத், அல்-குர்ஆனின் ஒளியில் ஹஜ்ஜின் நோக்கங்கள், மர்கஸூத் தப்ஸீர் லி திராஸாத் அல்-குர்ஆனியா, கட்டுரை இணைப்பு (https://tafsir.net/article/5279/mqasd-al-hj-fy-dw-a-al-qr-aan-al-krym)
7. மேலது
8. ஸூப்கீ, அப்துல் லதீப், நோன்பிற்கும் இஹ்ராமிற்கும் இடையில், மஜல்லதுல் அஸ்ஹர், பாகம்:27 பக்: 1952,1953

அல்–குர்ஆனில் ஹஜ் குறித்து பார்க்கின்ற பொழுது இப்ராஹிம் மற்றும் இஸ்மாயில் (அலை) அவர்கள் கஃபாவை கட்டியது முதல் இப்ராஹீம் (அலை) ஹஜ்ஜுக்கு அழைப்புவிடுத்து அதான் சொல்லுமாறு ஏவப்பட்டது வரையான இஸ்லாத்திற்கு முற்பட்ட வரலாறும் இஸ்லாத்தில் ஹஜ் கடமையாக்கப்பட்டது குறித்தும் ஹஜ்ஜினுடைய வழிபாட்டு முறை, அதனுடைய ஒழுக்கங்கள், அதற்குப் பின்னால் இருக்கின்ற தாற்பரியங்கள் குறித்தும் அதனோடு ஹஜ் கிரிகையின் போது உள்ளம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை வழிகாட்டும் விதமான பல வசனங்களையும் காணக்கிடைக்கிறது.[9]

அல்குர்ஆன் வெறுமனே சட்டங்களை மாத்திரம் கூறுகின்ற சட்டநூல் அல்ல. அது சட்டங்களை கூறுவது போன்றே குறித்த சட்டங்களுக்கு பின்னணிக் காரணியாக அமைகின்ற விடயங்கள் குறித்தும் பேசுகின்றது. அதேநேரம் சட்டங்களை விட அதிகமாக வாழ்வியல் தத்துவங்களை பேசுவதாகவே அல்குர்ஆன் அமைந்திருக்கின்றது.

தண்டனைகள் மூலம் சட்டங்களை பின்பற்ற வேண்டும் என்பதற்கு அல்குர்ஆன் அழுத்தம் கொடுப்பதை விட குறித்த சட்டங்களைக் கடைபிடிப்பதினால் கிடைக்கின்ற நன்மைகள், பலாபலன்கள், அவற்றுக்குப் பின்னால் உள்ள நோக்கங்கள், தாற்பரியங்கள் என்பவற்றை தெளிவுபடுத்தி தனது பின்பற்றாளர்களை உற்சாகப்படுத்தி சட்டங்களை பின்பற்ற அழுத்தம் கொடுக்கின்றது. உதாரணமாக இதனை சூரா பகராவில் நோன்பு கடமையாக்கப்பட்டது குறித்தும் நோன்பினுடைய சட்டங்கள் குறித்தும் பேசுகின்ற அல்குர்ஆன் வசனங்களை பார்ப்பதன் ஊடாக மிகத் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.[10] அதே பின்னணியைக் கொண்டதாக அல்குர்ஆனில் ஹஜ் குறித்த வசனங்களும் அமைந்திருப்பதை கண்டு கொள்ள முடிகிறது. சூரா பகராவில் ஹஜ் குறித்து பேசுகின்ற 189ம் வசனம் தொடக்கம் 203 வரையான வசனங்களை உதாரணமாக பார்க்கின்ற பொழுது அங்கு சட்டங்களை குறிப்பிடுவதோடு இணைத்து ஹஜ்ஜினுடைய நோக்கம், தாற்பரியம், இலக்கு என்பவற்றை தெளிவுபடுத்தும் வகையிலான வசனங்களை கண்டு கொள்ள முடிகிறது.

உதாரணமாக தக்வா[*] உடையவர்களாக இருங்கள். ஹஜ்ஜுக்கான உங்கள் கட்டுச் சாதமாக தக்வாவை தயார்படுத்திக் கொள்ளுங்கள். அதிகமாக அல்லாஹ்வை

---

9. அறிஞர் குழாம், மவ்ஸூஅது தப்ஸீர் அல்-மவ்ழூஈ லில் குர்ஆனில் கரீம், பாகம்: 11, ப: 305-374
10. மன்ஸூர், உஸ்தாத், அல்-குர்ஆனை சுயமாகக் கற்றல், காணொலித் தொடர், தொடர் : 05,
இணைப்பு : (https://www.youtube.com/watch?v=MTvo6VzaQpo&list=PLKL34_Bp5XsgDjoZ9kD2X9H8RYFHaj8oS&index=5)

*இறைவன் குறித்த பிரஞ்சையோடு இருத்தல் ( மேலதிக விளக்கம், பார்க்க: உஸ்தாத் மன்ஸூர், குர்ஆனிய சிந்தனை,ஸூரா பாதிஹா மற்றும் ஸூரா பகரா (மேலதிக விளக்கங்களுடன் கூடிய மீள்பதிப்பு), அல்-குர்ஆன் திறந்த கல்லூரி, 2023, பக்:55, 56

v- சில குறிப்பிட்ட கலைச் சொற்களை குறித்த மூல மொழியிலேயே பயன்படுத்துவது பொருத்தமானது. ஏனெனில், குறித்த கலைச்சொல்லை பிற மொழியினுள் ஒரு சொலில் சிறைபிடிக்க முடியாது போகின்ற சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதன் போது குறித்த கலைச் சொல்லின் மூல மொழியை பயன்படுத்துவது சிறந்தது. அதனோடு குறித்த கலைச்சொல் குறித்த சுருக்கமான விளக்கத்தை அடிக்குறிப்பில் இடுவது பொருத்தமானது. தக்வா என்ற சொல்லை பொருத்தவரையில் இலங்கை சோனகத் தமிழில் பரவலாக அறியப்பட்ட ஒரு சொல்லாகும். அதன் கருத்தை புரியவைக்க வேண்டிய தேவையே காணப்படுகின்றது.

ஞாபகப்படுத்துங்கள். அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு கேளுங்கள் போன்ற வசனங்களோடு அதிகமாக நன்மைகளை செய்ய தூண்டும் விதமாக வந்துள்ள “அல்லாஹ் நன்மைகள் செய்வதை அறிந்தவனாக இருக்கிறான்” போன்ற வசனங்களை குறிப்பிட முடியும்.

இது ஹஜ் செய்கின்ற ஹாஜிகள் மிகச் சிறந்த பக்குவ நிலையோடு ஆன்மீக ஒழுக்கங்களை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்திருக்கின்றது. குறிப்பாக ஹஜ் குறித்து கூறப்படுகின்ற சட்டங்களோடு இணைத்து இவை கூறப்பட்டிருப்பதானது குறித்த சட்டங்களை ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் சீரான உளநிலையோடும் நிறைவேற்ற குறிப்பிட்ட ஆன்மீக பக்குவ நிலை இருக்க வேண்டும் என்பதை சுட்டுவதாக அமைகிறது.

அதேநேரம் ஹஜ் குறித்த அல்குர்ஆன் வசனங்களை நோக்கும் இடத்தில் ஹஜ்ஜுனுடைய ரகசியங்களையும் நோக்கங்களையும் புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு செயற்பாட்டை செய்கின்ற பொழுது அதன் நோக்கங்களையும் இரகசியங்களையும் தாற்பரியங்களையும் புரிந்து செயல்படுவது குறித்த அச்செயலை உணர்வு பூர்வமாக செய்வதற்கு தூண்டுதலாக அமையும். ஹஜ் குறித்த விடயத்தை பார்க்கின்ற பொழுதும் இன்று எமது முஸ்லிம்களில் பலர் ஹஜ்ஜோடு தொடர்புபட்ட பிக்ஹ் சார்ந்த விடயங்களில் அதிகமாக அழுத்தம் கொடுத்து ஹஜ்ஜினுடைய ஆன்மீகப் பக்கத்தில் குறைவு செய்து விடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.[11] எனவே, அடிப்படையான பிக்ஹ் விடயங்களைப் புரிந்து கொள்வதோடு குறித்த வணக்க வழிபாட்டின் நோக்கங்களையும் இரகசியங்களையும் புரிந்து கொள்ள முயற்சிப்பது ஆன்மீக உணர்வோடு அதனை நிறைவேற்றுவதற்கு வழி செய்வதாக அமையும். குறிப்பாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்ற நோக்கங்களையும் தாற்பரியங்களையும் இரகசியங்களையும் புரிந்து கொள்ள அதன் வசனங்களை விளங்க முயற்சிப்பது மிக அடிப்படையான ஒன்றாக அமைகிறது.

ஹஜ் குறித்த அல்குர்ஆனுடைய வசனங்களை அவதானிக்கின்ற பொழுது பின்வரும் நோக்கங்களையும் இரகசியங்களையும் அடையாளப்படுத்த முடிகிறது.[12]

1. ஏகத்துவத்தையும் அல்லாஹ்வுக்காக வேண்டி செய்கிறேன் என்ற தூய எண்ணத்தையும் நிலை நாட்டுதல்.
2. உபூதிய்யாவையும் (அல்லாஹ்வுகான அடிமைத்தனம்) அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணிவதையும் சாத்தியப்படுத்தல்.
3. இழிவான நடத்தை பிறழ்வுகளில் இருந்து உள்ளத்தை தூய்மைப்படுத்தல்.

---

11. அல்-குவய்லி, முஹம்மத், அல்-குர்ஆனின் ஒளியில் ஹஜ்ஜின் நோக்கங்கள், மர்கஸுத் தப்ஸீர் லி திராஸாத் அல்-குர்ஆனியா, கட்டுரை இணைப்பு (https://tafsir.net/article/5279/mqasd-al-hj-fy-dw-a-al-qr-aan-al-krym)
12. மேலது

4. மறுமை வாழ்வுக்கான தயார்படுத்தலின் முக்கியத்துவம் குறித்து எச்சரிக்கையூட்டல்.
5. அல்லாஹ்வினுடைய கிரிகைகளை மகத்துவப்படுத்த தூண்டல்.
6. உலக நலன்களுக்கிடையிலும் மறுமை நலன்களுக்கிடையிலும் ஒப்பிட்டு நோக்கல்.
7. முஸ்லிமுடைய உள்ளத்தை அல்லாஹ்வை ஞாபகமூட்டுவதோடு இணைத்தல்.
8. மனிதர்களுக்கிடையிலான சமத்துவத்தை உறுதிப்படுத்தல்.
9. நுணுக்கத்தின்பாலும் ஒழுக்கத்தின்பாலும் முஸ்லிமைப் பயிற்றுவித்தல்.
10. சமூக ஒற்றுமையை உறுதிப்படுத்தல்.

எனவே அல்-குர்ஆனுடைய வசனங்களை ஆழ்ந்து நோக்குகின்ற பொழுது இன்னும் பல விடயங்களை எம்மால் அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு தலைப்பு வாரியாக அல்குர்ஆனுடைய கருத்துக்களைப் புரிந்து கொள்ள முயல்வதானது எமது செயற்பாடுகளை மேலும் உளத்தூய்மையோடும் உள்ளச்சத்தோடும் உற்சாகத்தோடும் செய்வதற்கு உறுதுணையாக அமையும்.

இறுதியாக இக்கட்டுரையானது தலைப்பு வாரியாக அல்குர்ஆனை அணுகுவதற்கான ஒரு சிறு முயற்சியே தவிர ஹஜ் குறித்த அல்குர்ஆனுடைய முழுமையான நிலைப்பாட்டை விளக்குவது அல்ல. அல்குர்ஆனில் ஹஜ் குறித்த ஒரு சிறு அறிமுகத்தையே தர முயற்சித்தோம். இதனூடாக இஸ்லாமிய கலைகள் வளர்ச்சிப் பாதையில் இருக்கின்றது என்பதையும் குறிப்பாக தப்ஸீர் கலை பல வளர்ச்சி கட்டங்களை கடந்து வளர்ந்து கொண்டே செல்கின்றது என்பதையும் புரிந்து கொண்டோம். அல்குர்ஆன் ஹஜ் குறித்து என்ன பேசுகிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் கற்பதற்கான ஒரு சிறு வழிகாட்டலையும் பெற்றுக் கொண்டோம்.

எனவே நாம் எந்த ஒரு செயற்பாட்டை செய்கின்ற பொழுதும் அதனை அதன் நோக்கங்களை அறிந்து செய்ய வேண்டும். உண்மையான அதன் அடைவை அடைய முயற்சிக்க வேண்டும் என்பதை இக்கட்டுரையின் மிகச் சுருக்கமான படிப்பினையாகக் கொள்கிறோம். அல்குர்ஆனில் ஹஜ் என்ற தலைப்பு குறித்த அறிமுகத்தையே செய்திருக்கின்றோம். இதனை முழுமையாக செய்ய அல்-குர்ஆனில் இருக்கக்கூடிய ஹஜ்ஜோடு தொடர்புபட்ட வசனங்களை திரட்டி முதலில் அவற்றை தப்ஸீர் நூல்களின் உதவியோடு ஆழமாகக் கற்க வேண்டும். பின்பு அவற்றை இன்னும் பல கிளைத் தலைப்புகளாக பிரித்து பகுதி பகுதியாக விளக்க வேண்டும். இறுதியாக அல்குர்ஆன் ஹஜ் குறித்து என்ன கூற வருகிறது என்பதை முடிவுரையில் குறிப்பிட வேண்டும். இவ்வாறு செய்கின்ற பொழுது தான் குறித்த தலைப்பு முழுமை பெறுகின்றது. அல்லாஹ் எம்மை முஹம்மத் (ஸல்) அவர்களுடைய உம்மத்திற்கு பிரயோசனம் தரக்கூடியவர்களாக ஆக்குவானாக..!



அஷ்–ஷெய்க் சதீம் ( நளீமி )

# அல் – ஹஜ்ஜு அரபா

“الحج عرفة”

“ஹஜ் என்பது அரபாவாகும்”[1] எனும் வசனம் ஹதீஸின் ஒரு பகுதியாகும். சுனன் நஸாஈ இல் மேற்படி நபிமொழி பின்வருமாறு அறிவிப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

“நபி (ஸல்) அவர்கள் அரபாவில் இருப்பதைக் கண்டேன். நஜ்திலிருந்து சில மனிதர்கள் வந்தார்கள். அவர்கள் ஹஜ் பற்றி கேட்குமாறு ஒருவரை பணித்தார்கள். அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: ஹஜ் என்பது அரபாவாகும். யார் முஸ்தலிபாவுடைய இரவில் சுப்ஹ் தொழுகைக்கு முன் வருகிறாரோ அவர் ஹஜ்ஜினை அடைந்துகொண்டார். மினாவுடைய நாட்கள் மூன்றாகும். யார் இரு நாட்களில் அவசரமாக முடித்துக் கொள்கிறாரோ, அவர் மீது எக்குற்றமும் கிடையாது. யார் பிற்படுத்தி மூன்று நாட்களில் முடித்துக் கொள்கிறாரோ அவர் மீதும் குற்றமில்லை. பின்னர் வாகனத்தின் பின்னால் ஒரு மனிதனை ஏற்றினார். அவர் மக்கள் மத்தியில் சப்தமாக அறிவித்தார்.

**விளக்கம்**

அரபா என்பது மக்காவிலிருந்து தாயிபிற்குச் செல்லும் வழியிலுள்ள மலைப் பிரதேசமாகும். இது மக்காவிலிருந்து சுமார் 22 கி.மீ தொலைவிலும், மினாவிலிருந்து 10 கி.மீ தொலைவிலும், முஸ்தலிபாவிலிருந்து 6 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

---

1. அறிவிப்பவர்: அப்துர் ரஹ்மான் பின் ய.ஃமார் அத் தெய்லி
அல்பானி, இர்வா அல்-கலீல் (1064) அல்-நஸாயி (3016), (3044) திர்மிதி (889) இப்னு மாஜா (3015) ஹுமைதி (923) இப்னு அபி ஷைபா (13863) அஹ்மத் (18980) அப்த் இப்னு ஹுமைத் (310) தாரமி (2018)

“ஹஜ் என்பது அரபாவாகும்” என நபியவர்கள் குறிப்பிட்டதனூடாக நாடியது ஹஜ்ஜின் முக்கியமான கிரியை அரபாவில் தரிப்பதாகும். இமாம் நவவி (ரஹ்) அவர்கள் “ஹஜ்ஜின் தூண், அதன் பெரும்பகுதி அரபா” என்கிறார்.[2] இது துல் ஹஜ் 9ம் நாளாகும். மாறாக ஹஜ்ஜில் அரபாவில் தரிப்பது மாத்திரமே கடமை எனும் கருத்தைக் காட்டாது. ஏனெனில் இது போன்ற பிரயோகங்களை நபியவர்களது இன்னும் சில ஹதீஸ்களில் எம்மால் காண முடியும்.

உதாரணமாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் “கைசேதம் கொள்வதே தவ்பாவாகும்”[3] அதாவது தவ்பா எனும் பாவமீட்சியின் முக்கியமான பகுதி, தான் செய்த பாவங்களுக்காக கைசேதப்பட்டு வருந்துவது. எனவே அரபாவில் தரிப்பதானது ஹஜ்ஜின் அர்கான்களில் ஒன்று என்பதில் இஸ்லாமிய அறிஞர்கள் இஜ்மாவான கருத்தைக் கொண்டுள்ளனர் என இமாம்களான இப்னு குதாமா, இப்னு அப்துல் பர், இப்னு முன்திர் போன்றோர் குறிப்பிடுகின்றனர்.[4] துல் ஹிஜ்ஜா 09 வது நாள் அரபாவில் தரிக்கத் தவறும் போது அந்த ஆண்டில் ஹஜ்ஜை தவறவிட்டவராக கணிக்கப்படுவார். எனவே உம்றாவை மாத்திரம் செய்துவிட்டு திரும்ப முடியும்.

அல்லாஹ் சில மனிதர்களை விட சிலரை மேன்மைப்படுத்தி வைத்துள்ளான். சில இடங்களைவிட சில இடங்களை மேன்மைப்படுத்தி வைத்துள்ளான் சில காலங்களைவிட சில காலங்களை மேன்மைப்படுத்தி வைத்துள்ளான். ஏன் அரபாவுடைய நாள் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதற்கு பல காரணங்களும் சிறப்புக்களும் காணப்படுகின்றன. இது மட்டுமே என எவராலும் குறிப்பிட்டுக் கூற முடியாது. அவையனைத்தும் மொத்தமாக இணைந்து அப்பாரிய முக்கியத்துவத்தை இந்த நாளிற்கு வழங்குகிறது. அரபா ஏன் சிறப்பிடம் பெறுகிறது..? இந்தக் கேள்விக்கான பதிலை சிலகுறிப்புக்களாக வழங்குவது சுருக்கமாகவும், புரிந்து கொள்ள இலகுவாகவும் இருக்கும்.

- அரபா மைதானம் எனப்படுவது வணக்க வழிபாட்டிற்கான இடம்.

ஹஜ் கிரியை அடியார்களிடமிருந்து இறைவனுக்கான பூரண அடிமைத்துவத்தையும் கட்டுப்பாட்டையும் எதிர்பார்க்கிறது. அதன் செயற்பாடுகளான தவாப், கல்லெறிதல், தரித்தல், தொங்கோட்டம் போன்றவற்றிற்கு அறிவுரீதியான விளக்கங்களை வழங்குவது சிரமமாகின்றது. இது இறைவனுக்காக கட்டுப்படுவது என்பதை பூரணமாக வலியுறுத்துகிறது. அத்தோடு சேர்த்து பொதுவாக ஹஜ் கிரிகையின் போது தரிக்கும் இடங்களில் தொழுகை, திக்ர் பிரார்த்தனை போன்ற வணக்கங்கள் இடம்பெறுகின்றன. ஏனைய காலங்களில் இவ்வணக்க வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் இக்காலப்பகுதியில் செறிவாகவும்

2. ஷரஃஹல் முஸ்லிம் (2/37)
3. இப்னு அப்துல் பர், தம்ஹீத் (10/20) இப்னு முன்திர், இஜ்மா (ப: 57) இப்னு குதாமா, முக்னி (3/368)
4. அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அல்பானி, ஸஹிஹ் இப்னு மாஜா (3448) , இப்னு மாஜா (4252), அஹ்மத் (3568)

தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்படுவது ஏனைய காலங்களை விட வித்தியாசப்படுகின்றது. அதிலும் அரபா மைதானம் திக்ர் மற்றும் பிரார்த்தனை புரிவதற்கு சிறப்பிடம் பெறுகிறது. அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் “மிகச்சிறந்த பிரார்த்தனை அரபா நாளுடைய பிரார்த்தனையாகும். நானும் எனக்கு முன் வந்த நபிமார்களும் கூறியதில் சிறந்தது “லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்” என்பதாகும். (இதன் பொருள் : அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் கிடையாது. அவன் தனித்தவன். இணையற்றவன். அவனுக்கே ஆட்சி அதிகாரம் உரித்தானது. அவனுக்கே புகழ்ச்சியும் நன்றியும் உரித்தானது. அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் உடையவன் என்பதாகும்.)[5]

இதற்கு விளக்கமளிக்கும் போது இந்தியாவைச் சேர்ந்த அறிஞர்களில் ஒருவரான ஷேக் ஸபியுர் ரஹ்மான் முபாரக்பூரி (ரஹ்) அவர்கள் “ஏனெனில் அது நிரப்பமான கூலியையும் விரைவான பதிலையும் கொண்டது ....மேலும்” நானும் எனக்கு முன் வந்த நபிமார்களும் கூறியதில் சிறந்தது “லா இலாஹ இல்லல்லாஹு” என்பது அந்த பிரார்த்தனையை விளங்கப்படுத்துவதாக வந்துள்ளது.” என்கிறார்.[6]

மொரோக்கோ நாட்டின் சமகால அறிஞர்களில் ஒருவரான கலாநிதி அஹ்மத் ரய்ஸுனி திக்ரையும் துஆவையும் ஹஜ்ஜின் மகாஸித்களில் ஒன்றாக அடையாளப்படுத்துவார். குறிப்பாக அரபாவில் தரிப்பது பற்றிக் கூறும் போது “கண்ணியமிகு ஹஜ் என்பது அரபாவில் தரிப்பதாகும்” என இருப்பதன் கருத்து ‘ஹஜ் என்பது திக்ரும் துஆவுமாகும்’ என்கிறார்.[7]

- வணக்க வழிபாட்டிற்கான காலம் அரபாவில் தரிக்கும் காலமாகும்.

இங்கு இதனை தனியாக அடையாளப்படுத்தக் காரணம் ஹஜ்ஜுக்கு செல்லாதவர்களுக்கு அரபா தினம் வணக்க வழிபாடுகளுக்கான தினமாக இருப்பதை கவனப்படுத்தும் நோக்கமாகும். பொதுவாக துல் ஹிஜ்ஜா முதல்பத்து நாட்களும் செய்யும் நற்செயல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. குறிப்பாக அரபா நாளில் நோன்பு நோற்பது ஊரில் இருப்பவர்களுக்கு நிரப்பமான நன்மைகளை பெற்றுத் தருகிறது. அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் “அரபா நோன்பானது கடந்து போன வருடத்தினதும் பிறக்கவுள்ள வருடத்தினதும் பாவங்களுக்கான பரிகாரமாக அமைய எதிர்பார்க்கிறேன்.”[8] எனினும் ஹஜ்ஹில் ஈடுபடுபவருக்கு நோன்பு

5. அறிவிப்பாளர்: அம்ர் பின் ஜுப் அல்பானி, ஸஹீஹ் அத்-திர்மிதி (3585) (ஹசன் என்கிறார்) திர்மிதி (3585), அல்-முக்லஸ் பில் முக்லசியாத் (1437)
6. துஹ்.்.பத் அல்-அஹ்வாதி (10/33).
7. மா கல்ல வதல்ல (ப:66)
8. அறிவிப்பவர்: அபூ கதாதா (ரழி) அல்பானி, ஸஹிஹ் இப்னு மாஜா (1416) இப்னு மாஜா (1730) முஸ்லிம் (1162) விரிவாக.
9. சய்யித் சாபிக், பிக்ஹ் சுன்னா (1/722)

நோற்காதிருப்பதே விரும்பத்தக்கதாகும். ஏனெனில் துஆ, திக்ர் போன்றவற்றில் சளைக்காதிருப்பதற்காகும்.[9]

- இறைவனின் விஷேட அருளிற்கான தினமாக அரபா தினம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

இத்தினம் இறை மன்னிப்பு, நரக விடுதலை போன்ற அருள்களை இறைவன் வாரி வழங்கும் தினமாகவும் அமைகிறது. அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "அரபா தினத்தை விட அதிகமாக நரகின் அடிமைகளுக்கு விடுதலை அளிக்கும் நாள் கிடையாது. அன்று அல்லாஹ் அடியார்களிடம் நெருங்கி வந்து, வானவர்களிடம் பெருமை பாராட்டுகிறான். இன்னும் "இவர்கள் என்ன விரும்புகிறார்கள்? எனது வானவர்களே நீங்கள் சாட்சியாக இருங்கள், நான் அவர்களை மன்னித்துவிட்டேன்" எனக் கூறுவான்.[10]

- இஸ்லாமிய வாழ்வியல் அருள் நெறி பூரணப்படுத்தப்பட்ட இடமும் தினமுமாக அரபா காணப்படுகின்றது.

உமர் (ரழி) அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படுவதாவது, யூதர்களில் ஒரு மனிதர் உமர் (ரழி) அவர்களிடம் : அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் ஓர் இறை வசனத்தை ஓதுகிறீர்கள். அந்த வசனம் மட்டும் எங்களிடையே இறங்கியிருந்தால், அந்நாளை நாங்கள் பண்டிகை நாளாக ஆக்கிக் கொண்டிருப்போம் என்றார். அதற்கு உமர் (ரழி) அவர்கள் : "எந்த வசனம்?" என வினவினார்கள். "இன்று உங்களது மார்க்கத்தை உங்களுக்காக நான் முழுமையாக்கி விட்டேன். எனது அருட்கொடையையும் உங்கள் மீது நான் நிறைவு செய்துவிட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை உங்களது மார்க்கமாக ஏற்றுக் கொண்டுவிட்டேன்." (திருக்குர்ஆன் 5:3) எனப் பதிலளித்தார். அதற்கு உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள் : அத்தினத்தையும், அது நபியவர்கள் மீது இறங்கிய இடத்தையும் அறிவேன், அப்போது அவர் ஜூம்ஆவுடைய தினத்தில் அரபா மலையில் நின்று கொண்டிருந்தார்.[11]

- சமூகப் பெறுமானங்கள் உறுதிப்படுத்தப்பட்ட நாள் அரபாவாகும்.

இஸ்லாத்தின் சமத்துவம், நீதி, உரிமைகள், பெண்களின் மாண்பு போன்ற உயர் விழுமியங்கள் ஒரு தனித்துவமான போக்கினைக் கொண்டது நவீன காலத்தில் பேசப்படும் விழுமியங்களின் ஒளியில் அதை பார்க்க முடியாது. அது முதலாளித்துவமும் அல்ல கம்யூனிசமும் அல்ல. அது ஒரு மூன்றாவது பரிமாணம். இருந்தும் அது காலத்தால்

10. அறிவிப்பாளர்: ஆயிஷா (ரழி), அல்பானி, ஸஹிஹ் அத்-தர்கீப் (1154) முஸ்லிம் (1348) ஒரு சிறிய வேறுபாட்டுடன்.
11. அறிவிப்பாளர்: உமர் பின் கத்தாப்(ரழி)
புகாரி (45) முஸ்லிம் (3017) சிறிய வித்தியாசத்துடன்.

முந்தியது. பொதுவாக இஸ்லாமிய போதனைகளிலும் நபிகளாரது நடைமுறைகளிலும் இவை சிதறிக் கிடப்பினும் ஹஜ்ஜின் போது அதற்கான ஸ்தூல வடிவம் கொடுக்கப்படுகின்றது. மேலும் அது இயங்கும் உதாரணமாக மாற்றமுறுகிறது. ஒரே கோஷம், ஒரே உடை, சுடும் வெயிலிலும் நிறம், மொழி, கோத்திரம், சாதி என்பவற்றை மறுத்து, பட்டம், பதவி, செல்வாக்கு, சொகுசு போன்ற அனைத்தையும் கைவிட்டு இறைவெனுக்கென மாபெரும் அரபா மைதானத்தில் ஒற்றுமையை பிரஸ்தாபித்து ஒன்று திரளும் அம் மக்கள் திரள் இஸ்லாத்தின் செய்தியை உலகிற்குப் பிரகடனம் செய்கிறது.

“ஹஜ் என்பது அரபாவாகும்” எனும் ஹதீஸ் இஸ்லாத்தின் தூது கொண்டுவந்த மகோன்னதம் மிக்க ஒரு நாளை அறிமுகப்படுத்துகிறது. அது காலத்தாலும் இடத்தாலும் உயர்ச்சி பெறுகிறது. கிரியைகளாலும் இலக்குகளாலும் மேன்மை அடைகிறது. இறையியல் நோக்கிலும் சமூகவியல் நோக்கிலும் முன்னுரிமை பெறுகிறது. மொத்தமாக இறைவனுக்கு முன் சரணடைதல் எனும் உன்னதமான நிலையை இந்த அரபாவுடைய தினம் எம்மவர்க்கு சாத்தியப்படுத்துகிறது.



அஷ்-ஷெய்க் மாஜிர் (நளீமி)

# ஐயமும் தெளிவும்

“நீங்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காக முழுமையாக்குங்கள்.” (அல்குர்ஆன் 2:196)

ஹஜ் உடைய மாதமும் அதில் உள்ள பிரதான வணக்கமாகிய ஹஜ் கிரியையும் எம்மை நோக்கி வந்து கொண்டிருக்கும் தருவாயில் பரவலாக மார்க்க விவகாரங்களில் முஸ்லிம் சமூகம் தெளிவுகளை அவ்வப்போது வேண்டி நிற்பது குறிப்பான அம்சமாகும். பொதுவாக சமூக மட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளை அடிப்படையாக வைத்து இவ்வாக்கம் இடம்பெறுகிறது. எனவே அதற்கான இடைவெளியை சிறிதளவேனும் நிவர்த்தி செய்யும் முயற்சியாகவே இந்த ஆக்கம் இடம்பெறும். இன்ஷா அல்லாஹ்.

**01. ஒன்றுக்கு மேற்பட்ட ஹஜ் செய்வதை பொதுவாக எவ்வாறு புரிந்து கொள்ளலாம்?**

வாழ்வில் ஒரு முறை தான் ஹஜ் கடமையாகின்றது. ஒருமுறைக்கு மேல் ஹஜ் செய்வது நபிலான உபரியான வணக்கமாகும். அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள் “அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு பிரசங்க நிகழ்த்தினார்கள். அப்போது கூறினார்கள் மக்களே ஹஜ் செய்வதை அல்லாஹ் உங்கள் மீது கட்டாய கடமையாக ஆக்கியிருக்கின்றான். ஆகவே நீங்கள் ஹஜ் செய்யுங்கள். ஒருவர் கேட்டார் : அல்லாஹ்வுடைய தூதரே ஒவ்வொரு ஆண்டுமா?, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். அவர் மூன்று முறை அதே வார்த்தையை திரும்பத் திரும்பக் கேட்டார். அதற்கு ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: “நான் ஆம் என்று கூறி இருந்தால் அது (உங்கள் மீது) கடமையாகியிருக்கும். ஆனால் நீங்கள் அதைச் செய்ய சக்தி பெற்றிருக்க மாட்டீர்கள். ஆகவே நான் உங்களை விட்டதுடன் என்னையும் நீங்கள் விட்டுவிடுங்கள்.

உங்களுக்கு முன்னுள்ளவர்கள் அழிந்ததெல்லாம் அவர்கள் தங்களது நபிமார்களிடத்தில் அதிகமாகக் கேள்வி கேட்டதாலும் கருத்து வேற்றுமை கொண்டதாலும் தான். ஆகவே நான் உங்களுக்கு ஒரு கட்டளையை கொடுத்தால் உங்களால் முடிந்த அளவு அதை நிறைவேற்றுங்கள். நான் உங்களை ஒரு காரியத்தை விட்டு ம் தடுத்து விட்டால் அதை நீங்கள் விட்டு விடுங்கள்." (புகாரி)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலிருந்து மதீனா வந்த பின்னர் ஒரு முறை தான் ஹஜ் செய்தார்கள். ஹஜ் செய்ய சக்தி பெற்றவர் மீது ஹஜ் வாழ்நாளில் ஒருமுறை தான் கடமை என்பதில் எல்லா அறிஞர்களும் ஒரே கருத்தில் இருக்கின்றனர். இமாம் யூஸுப் அல்கர்ளாவி (ரஹ்) அவர்களின் கருத்துப்படி: ஃபர்ள் நிறைவேற்றப்படாமல், செய்யப்படுகின்ற நஃபிலான வணக்கங்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்பது இஸ்லாத்தின் அடிப்படையான போதனையாகும். தனது உறவினரோ, அயலவரோ தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், பசியிலும், வறுமையிலும் தவித்துக் கொண்டிருக்கிற நிலையில் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டாமல் இரண்டாவது அல்லது நான்காவது தடவை ஹஜ்ஜை நிறைவேற்றச் செல்கின்ற ஒருவரின் ஹஜ்ஜை அல்லாஹ் எப்படி ஏற்றுக் கொள்வான்..?

"தனது அயலவன் பசியில் வாடுவதை அறிந்து கொண்டே, தான் மாத்திரம் வயிராற உண்டுவிட்டு இரவை கழிப்பவன் என்னை ஈமான் கொள்ளவில்லை." என்றார்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள். (துபரானி, பஸ்ஸார்)

**02. ஹஜ் உம்ரா செய்பவர் தனது பயணம் குறித்து பிறருக்கு அறிவிக்கலாமா?**

ஹஜ் செய்பவர் தான் ஹஜ் செய்யப் போகும் செய்தியைப் பிறருக்குத் தெரிவிப்பதை இஸ்லாம் இஹ்லாஸைப் பாதிக்கும் அம்சமாகப் பார்க்கவில்லை. நபி (ஸல்) அவர்கள் தான் ஹஜ் செய்யப் போவதைப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்) இவ்வாறே உமர் (ரழி), துமாமா (ரழி) போன்ற ஸஹாபாக்கள் தமது உம்றாவைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கூறியுள்ளார்கள். எனவே தான் ஹஜ்ஜுக்குச் செல்லப் போவதை ஒரு ஹாஜி தன்னைச் சார்ந்தவர்களுக்குத் தெரிவிப்பதில் எந்தக் குற்றமுமில்லை என்பதில் எல்லா அறிஞர்களும் ஒரே கருத்தில் இருக்கின்றனர். ஆனால் அவ்வறிவிப்பு பிரபல்யம், புகழ், முகஸ்துதி என்பவற்றை நோக்காகக் கொள்ளாதிருக்க வேண்டும்.

நீங்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காக முழுமையாக்குங்கள்.
(அல்குர்ஆன் 2:196)

மேற்படி வசனத்தில் ஹஜ்ஜையும், உம்றாவையும் அல்லாஹ்வுக்காகச்செய்யுமாறு அல்லாஹ்

ஏவுகின்றான். ஹஜ், உம்றாச் செய்வோர் பேருக்காகவோ, புகழுக்காகவோ அல்லது எல்லோரும் செய்கின்றார்கள் என்பதற்காகவோ செய்யக் கூடாது. ஹஜ், உம்றாச் செய்வோரது எண்ணம் தூய்மையானதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்காக அவனது திருப்பொருத்தத்தைப் பெறும் நோக்கில் செய்யப்பட வேண்டும்.


**03. சிறுவயதில் ஹஜ் செய்த ஒருவர் பருவ வயதை அடைந்த பின்னரும் ஹஜ் நிறைவேற்ற வேண்டுமா?**

பருவ வயதை அடையாதவர்கள் மீது ஹஜ் கடமையாகாது. அவர்கள் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றியதாகவும் கருதப்படாது. எனினும் அவர்களது ஹஜ் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக ஆகிவிடும். அவர்கள் நன்மை தீமையை பிரித்தறிகின்ற பக்குவமுள்ள வயது வரும் நிலையில் ஹஜ் செய்வதற்கு உடலாலும் பொருளாலும் சக்தி பெற்றால் அவர் தன் மீது ஃபர்ளான ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டும். சிறுவயதில் செய்த ஹஜ் அவருக்கு போதுமாகாது. இதில் அனைத்து அறிஞர்களும் ஏகோபித்த கருத்தில் உள்ளனர்.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹ௴ அன்ஹ௴ அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு பெண் தனது குழந்தையை உயர்த்திக் காண்பித்து அல்லாஹ்வின் தூதரே இந்த குழந்தைக்கு ஹஜ் சேருமா என்று கேட்டார். நபி ஸல்லல்லாஹ௴ அலைஹி வஸ ல்லம் அவர்கள் கூறினார்கள் : ஆம் (சேரும்). உமக்கும் கூலி கிடைக்கும். (முஸ்லிம்)

இந்த நபிமொழி குழந்தைகள் அவர்கள் எந்த வயதில் இருந்தாலும் அவர்கள் செய்கின்ற ஹஜ் நிறைவேறிவிடும். அவர்களுடைய பொறுப்பாளர்களுக்கும் அதற்குரிய கூலி கிடைக்கும் என்பதனை உணர்த்துகிறது. ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹ௴ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் ரலியல்லா௴ஹ அன்ஹ௴ அவர்கள் அறிவிக்கின்றார்கள் : எந்த ஒரு சிறுவர் ஹஜ் செய்கிறாரோ பிறகு அவர் பருவ வயதை அடைந்து விட்டால் அவர் மீது மற்றொரு ஹஜ் கடமையாக இருக்கும். (காபிர்களுடன் வாழ்கின்ற) எந்த ஒரு கிராமவாசி ஹஜ் செய்வாரோ பிறகு அவர் ஹிஜ்ரத் செய்து (முஸ்லிம்களுடன் சேர்ந்து) விட்டால் அவர் மீது மற்றொரு ஹஜ் கடமையாக இருக்கும். எந்த ஓர் அடிமை ஹஜ் செய்வாரோ பிறகு அவர் உரிமைவிடப்பட்டால் அவர் மீது மற்றொரு ஹஜ் கடமையாக இருக்கும்.
(சுனன் ஸகீர் – பைஹக்கி)

அல்லாஹ௴ அஃலம்...



அஷ்–ஷெய்க் உஸ்மான் (நளீமி)

# ‘கஃபா’ எனும் அடையாளம்

கஃபா, பைதுல் ஹராம், பைதுல் அதீக் போன்ற பெயர்களை உச்சரிக்கும் போது எமது மனதில் தோன்றுவது சதுர வடிவிலான ஒரு கருப்பு கட்டடம் ஆகும். அது வெறுமையான ஒரு சாதாரண பெட்டி. உண்மையிலேயே இவ்வளவுதானா கஃபா...?

தொலைபேசியில் கஃபாவை கண்டுகளிக்கும்போது மனதை தூன்டில்போட்டு இழுப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்படுகின்து. ஜீவ காலத்தில் ஒரு தடவையேனும் அதனை நேரில் காண வேண்டும் எனும் அவா எம்முள் தோன்றுகிறது. சொத்துக்களை விற்றாவது அதனிடம் செல்ல வேண்டும் என்ற ஏக்கம் எம்மை ஆட்கொள்கிறது. ஒரு முறை அதனை தரிசித்தாலும் மீண்டும் மீண்டும் பயணமாக வேண்டும் என்ற ஆசை துளிர்த்துக்கொண்டே இருக்கிறது. முதன்முறையாக அதனை நேருக்குநேர் காண்கையில் காதலும் அச்சமும் கலந்த, வர்ணனைகளை தாண்டிய ஒரு மகிழ்வுணர்வு ஏற்படுகின்றது. இவையெல்லாம் நம் மனதில் ஒட்டுணர்வாக இருப்பவை அல்லவா. கஃபா ஏகத்துவத்தினதும் ஒற்றுமையினதும் சின்னமாகத் திகழ்வதனால் தான் இவை ஏற்படுகின்றன.

கஃபாவைச் சூழ திக்ர் மஜ்லிஸும், அவற்றில் வெவ்வேறு நிறங்களிலும், உயரங்களிலும், உடல்களும், உயிர்களும் இணைந்து உச்சரிக்கும் “லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்” என்ற வாசகத்தின் ஓசை மெய்சிலிர்ப்பை உண்டுபண்ணக்கூடியது. அங்கு பிரசன்னமாகி நாம் வல்ல ரஹ்மானோடு உரையாடுகையில் அவன் உண்மையாகவே நம்மை அவதானிக்கிறான், செவிசாய்க்கிறான், பதில் தருகிறான் என்ற ஆழமான நம்பிக்கை தோன்றும். அவ்வளவு சன நெரிசலிலும் இவ்வுணர்வுகள் தோன்றுமா என்ன? ஆம். சந்தேகமின்றி, கஃபா வல்லரஹ்மானின் இல்லம். அது மாத்திரமன்று, மனிதர்களான எமது வீடும் அதுவே. (ஆல இம்ரான்:96)
இமாம் இப்னு கஸீர் சூறா தூரின் விளக்கத்தில் அல் பைத் அல் மஃமூரை மலக்குகளின் கஃபா என்பதாக

வர்ணிக்கிறார். உலகத்தின் முதல் இறையில்லமான கஃபா, இப்ராஹீம் (அலை) புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்களால் அதன் அஸ்திவாரத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்டது. அவர்களின் காலம் முதல் பல்லாண்டுகள் அல்லாஹ்வை வணங்குவதற்கு பயன்பட்டு வந்த கஃபா அம்ர் இப்னு லுஹை என்பவனின் வழிதொட்டு சிலைகளால் நிரம்பலானது. பின்னர் ஹிஜ்ரி எட்டில் மக்கா வெற்றியோடு அச்சிலைகள் உரிய முறையில் அகற்றப்பட்டு கஃபா பல தெய்வ வழிபாடுகளை விட்டும் சுத்தமாக்கப்பட்டது. ஏகத்துவத்தின் அடையாளமாக மாறியது. கஃபா வெறுமனே ஒரு கட்டுமானம் மட்டுமல்ல. அது ஒரு மைற்கல். அதை நோக்கிதான் நாம் இறைவனை வணங்க வேண்டும். உம்ரா, ஹஜ் இரண்டினதும் ஆரம்பப்புள்ளி கஃபா தான். அல்லாஹ்வின்பால் முடிவில்லா நடைபோடும் மையம் அது.

நபி இப்ராஹீம் (அலை) மற்றும் அவரின் குடும்பத்தினரை நாம் சந்திக்கும் இடம் அது. ஏழை பணக்காரன், கருப்பர் வெள்ளையர், அரபி அஜமி, ஆண் பெண் போன்ற வித்தியாசம் எதுவும் இன்றி அனைவரும் வெள்ளை ஆடை அணிந்து அவனை நெருங்கும் காட்சி அவன் மட்டுமே ஏக இறைவன், நாமெல்லாம் அவனிடம் யாசிப்பவர்கள் என்ற உணர்வை ஊட்டும். இவ்வாறிருக்க, எப்படி இவைகளைத் தாண்டி யோசிக்கமுடியும்? ஒவ்வொருவரும் தான் பாவி, கஃபாவிற்கு அருகாமையில் இருக்க தான் தகுதியற்றவனாயினும் வல்ல ரஹ்மான் எனக்கு இப்பாக்கியத்தை அருளியுள்ளான் என்று கண்ணீர் சிந்தும் தருணத்தில் எவ்வாறு வேறு யோசனைகள் தோன்றும். பல வருடங்கள் அன்பிற்குரியவர்களை பிரிந்து மீண்டும் சந்திக்கும் தருணத்தில் உண்டாகும் மகிழ்ச்சியைவிட பன்மடங்கு பெரியது நாம் கஃபாவை காணும் தருணம். அவ்வாறிருக்க எப்படி வேறு எண்ணங்கள் உருவாகும்?

கஃபாவின் சிறப்பம்சங்களில் ஒன்றுதான், அங்கு ஒரு ரகாஅத் தொழுவது ஒரு லட்சம் ரகாஅத்கள் தொழுவதைப்போன்றது (அஹ்மத் 16117). அலி ஷரீஅதி நினைவுபடுத்துவது போன்று, கஃபாவில் ஏனைய இடங்களைப்போன்று சுருக்கி தொழ முடியாது. அதற்கான காரணங்களில் ஒன்று ஒவ்வொரு அசைவினதும் நன்மைகளை நாம் பெறுவதற்காகும். அங்கு ஒவ்வொரு “நானும்” “நாமாக” மாறி அல்லாஹ்வின் இல்லத்தை தவாப் செய்யும் போது ஒற்றுமை வெளிப்படுகிறது. அனைவரும் சாதாரண ஆடையை ஒத்த வர்ணத்தில் அணிந்து கஃபாவை தவாப் செய்கையில் ஒற்றுமை உண்டாகிறது. நான் எனும் கர்வத்தை களைந்து நாம் எனும் சமநிலையை கற்றுத்தருகிறது கஃபா.

அமெரிக்காவில் தான் வாழ்ந்த அனுபவத்தால் “கருப்பர்களும் வெள்ளையர்களும் ஒன்று சேரமாட்டார்கள்” என்ற தனது உறுதியான நம்பிக்கையை சுக்குநூறாக்குவதாக கஃபாவின் காட்சி அமைந்ததாக மால்கம் எக்ஸ் (அல் ஹாஜ் மலிக் ஷஹ்பாஸ்) குறிப்பிடுவது கஃபா ஒற்றுமையின் பீடம் என்பதை சான்றுபகர்கிறது. அல் ஹாபில் அல் இராகி கூறுவதைப்போன்று, கஃபா இன்றி மக்காவுக்கு பெறுமானம் இல்லை. கஃபா நம் உள்ளத்தோடு மிக ஆழமான தொடர்பு கொண்டது. ஏனெனில் கஃபாவுக்கும் எமக்குமான தொடர்பு நம்பிக்கை (ஈமான்) சார்ந்தது. நேரடியாக ஆன்மாவுடன் கை கோர்த்தது. கஃபா சாதாரண கட்டிடம் அல்ல. அது ஏகத்துவத்தினதும் ஒற்றுமையினதும் அடையாளம் என்பதை பறைசாற்றுகின்றது.



அஷ்-ஷெய்க் நாதிர் நூரி (நளீமி)

# ஆலு இப்றாஹீம்

அல்லாஹ் மனிதனை இவ்வுலகில் படைத்ததோடு விட்டுவிடாமல் தாய், தந்தை, கணவன், மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள், உறவினர்கள் என்ற பிணைப்பின் மூலம் குடும்பம் எனும் அழகியதொரு அமைப்பை அளப்பெரிய அருளாக மனிதனுக்கு வழங்கியுள்ளான். இத்தகைய குடும்ப வாழ்வை அல்லாஹ்வின் கட்டளைகளின் பிரகாரம் அர்த்தமுள்ளதாக அமைத்துக் கொள்ளும் பட்சத்தில், எம்மால் ஈருலகிலும் ஈடேற்றத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை எமது மார்க்கம் போதிக்கின்றது.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூலம் அவருடைய சமுதாயமாகிய எமக்கு நேர்வழிகாட்டும் நோக்கில், அல்லாஹ் அவனுடைய கலாமில் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்ப வாழ்வு மற்றும் அவர்கள் மேற்கொண்ட தியாகங்கள் பற்றி அதிகமான இடங்களில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளான்.

“இப்ராஹீமிடத்திலும் அவருடைய தோழர்களிடத்திலும் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கின்றது” (அல்குர்ஆன்: 60:4)

“திண்ணமாக, அல்லாஹ் அகிலத்தார்களில் ஆதமையும், நூஹையும், இப்ராஹீமின் குடும்பத்தாரையும், இம்ரானின் குடும்பத்தாரையும் சிறந்தோர்களாக தேர்ந்தெடுத்துக் கொண்டான். (அல்குர்ஆன்: 3:33)

இத்தகைய உயரிய தியாகங்களை மேற்கொண்டதற்காக அவர்களை கண்ணியப்படுத்தும் விதத்தில் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்தாகிய எம்மனைவராலும் நபி இப்ராஹிம் (அலை) அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும் வல்ல இறைவன் ஒவ்வொரு தொழுகையிலும் அத்தஹிய்யாத்தில் ஸலவாத்துல் இப்ராஹிமிய்யாவிலும், வருடாவருடம் தியாகத் திருநாளிலும் நினைவு கூறச் செய்திருக்கின்றான்.

நாம் எமக்கு மிகவும் பிடித்த விடயத்தை ஒரு போதும் இழக்கவோ விட்டுக் கொடுக்கவோ விரும்புவதில்லை. இருந்தபோதிலும் அதனை ஒரு பயனுள்ள தேவைக்காக அர்ப்பணம் செய்கின்ற போது அது தியாகம் எனப்படுகின்றது. இப்றாஹீம் (அலை) அவர்களுடைய வாழ்வு இறையச்சம், இறை நம்பிக்கை, தன்னம்பிக்கை, பொறுமை மற்றும் தியாகங்கள் நிறைந்ததாகவே காணப்பட்டது. அல்லாஹ்விற்கு அடுத்ததாக இவ்வுலகில் அவர்கள் அதீத அன்பு கொண்ட தனது குடும்பம் மூலமாகவே பல சவால்களையும் தியாகங்களையும் எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

சிலைகளை செதுக்கி அதனை விற்பனை செய்யும் தனது தந்தையை எதிர்ப்பதில் துவங்கி, நீண்ட நாள் பிரார்த்தனையின் பலனாக கிடைத்த அன்பிற்கினிய மகனான இஸ்மாயில் (அலை) அவர்களை பலியிடுமாறு பணித்த அல்லாஹ்வின் கட்டளை முதல் தனது மனைவி மற்றும் பிள்ளையினை தனியாக பாலைவனத்தில் விட்டுச் செல்வது வரை சாதாரண மனிதனால் அல்லாஹ்வின் உதவியின்றி எதிர்கொள்ள முடியாத அளவு சவால்களை நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் எதிர்கொண்டார்கள் என்பதை அவர்களின் குடும்ப வாழ்வு பறைசாற்றுகின்றது. சிலை வணக்கத்திலும் அறியாமையிலும் பல கடவுள் கொள்கையிலும் ஊறியிருந்த மக்கள் மத்தியில் அவர்கள் வணங்குகின்ற சிலைகளை செதுக்குவதிலும் அதனை விற்பதிலும் பெயர் பெற்றிருந்தார் நபி இப்ராஹிம் (அலை) அவர்களுடைய தந்தை 'ஆசர்'.

சிறுவயதிலிருந்தே தனது தந்தையால் செதுக்கப்படுகின்ற கற்சிலைகளை மக்கள் வாங்கி வணங்குகின்றனர், சிரம் தாழ்த்துகின்றனர் என்பதனையும், செதுக்கப்படுகின்ற சிலைகள் குறைந்தது தனக்குரிய வேலைகளை தானே நிறைவேற்றத் திராணியற்ற நிலையில் வெறும் கல்லாக இருப்பதையும் அவதானித்த நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு சிலைகள் மீதான கோபமும், வெறுப்பும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து. இதனால் சிலை வணக்க வழிபாடுகள், விஷேட நிகழ்வுகள், திருவிழாக்களில் இருந்து தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டதுடன், அனைத்தையும் படைத்து பரிபாலிப்பவன் ஒரே இறைவன் தான் என்ற உண்மையையும் உணர்ந்தார்கள். இவ்வாறு ஓரிறைக் கொள்கையை வலுவாக பற்றிப்பிடித்த நபி இப்ராஹிம் (அலை) தனது தந்தையை நோக்கி பின்வருமாறு வினவுகிறார்கள்.

"என் அருமைத் தந்தையே! (யாதொன்றையும்) கேட்க இயலாத, பார்க்க இயலாத உங்களுக்கு எந்தத் தேவையையும் பூர்த்தி செய்ய இயலாததுமான ஒன்றை ஏன் நீங்கள் வணங்குகிறீர்கள்? என்று அவர் தம் தந்தையிடம் கூறியதை நினைவுபடுத்தும். (19:42)

இவ்வாறு சூரத்துல் மரியமில் 42 முதல் 50 வரையிலான வசனத்தில் நபி இப்ராஹிம் (அலை) தனது தந்தைக்கு வழங்கிய அறிவுரைகளோடு சேர்த்து அல்லாஹ்விற்காக சிலை வணக்கத்தில் ஈடுபடும் தனது சொந்த தந்தையையும், மக்களையும் விட்டும் முற்றுமுழுதாக விலகியதால், அல்லாஹ் அவர்களுக்கு அழகிய வாரிசுகளை நன்கொடையாக வழங்கினான் என்றும் கூறப்படுகிறது.

சிறு வயதிலேயே தனது தந்தையோடும் சமூகத்தோடும் அல்லாஹ்விற்காக முரண்பட்ட நபி இப்ராஹிம் (அலை) அவர்களுக்கு, பல வருட பிரார்த்தனையின் பின்னர் அல்லாஹ்வின் பரிசாக கிடைத்த அன்பு மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிடுமாறு அல்லாஹ்விடமிருந்து கட்டளை வரும் என்பதனை ஒரு கணமும் சிந்தித்திருக்க மாட்டார்கள். ஒரு சாதாரண மனிதனால் கூட இத்தகைய சூழ்நிலையை எவ்வாறு கையாண்டிருக்க முடியும் என்று நினைத்துப்பார்க்கக் கூட முடியாதளவு இருக்க அல்லாஹ்வின் கட்டளை ஒன்றிற்காக தனது அருமை மகன் இஸ்மாயீலை அல்லாஹ்விற்காக பலியிட எத்தனித்தார்கள்.

அல்குர்ஆனில் 37ம் அத்தியாயத்தில் 100 முதல் 108 வசனங்களின் அடிப்படையில் இஸ்மாயில் (அலை) அவர்கள் "இது அல்லாஹ்வுடைய கட்டளை, அதை நிறைவேற்றுவது உங்களது கடமை, இன்ஷா அல்லாஹ் என்னை பொறுமையாளர்களுடன் காண்பீர்கள்." என தனது தந்தைக்கு ஆறுதலும் தைரியமும் வழங்கி அல்லாஹ்விற்காக தன் உயிரையே தியாகம் செய்ய முன்வந்ததையும் தெளிவாக வாசித்து விளங்கிக்கொள்ள முடியுமாக இருக்கிறது. இத்தகைய தந்தை, மகன் இருவரின் தியாகங்களை பூரணமாக ஏற்றுக் கொள்ளும் பொருட்டாக இஸ்மாயில் (அலை) அவர்களுக்குப் பதிலாக சுவனத்தில் இருந்து ஒரு ஆட்டை இறக்கி அதனைப் பலியிடுமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். இதன் அடிப்படையாகக் கொண்டே குர்பானி கொடுப்பதை ஒரு சுன்னாவாக எமது மார்க்கம் எமக்கு போதிக்கின்றது.

மேலும் இப்ராஹீம் (அலை) அவர்கள் சிறந்த இறைநேசராகவும் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவராகவும் இருந்த அதே வேளையில், சிறந்ததொரு மகனாகவும் சிறந்ததொரு கணவனாகவும் சிறந்ததொரு தந்தையாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். இவரைப் பற்றி இமாம் நவவி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்.

> "இப்ராஹீம் (அலை) தனது குடும்பத்தினருடன் பொறுமையாகவும், அன்பாகவும் நடந்து கொண்டார். அவர் அவர்களின் தவறுகளை மன்னித்து, அவர்களுக்கு வழிகாட்டுதல் செய்தார்"

மேலும் இமாம் அஹ்மத் குறிப்பிடுகையில்...

> "இப்ராஹீம் (அலை) தனது குடும்பத்தினருக்கு நல்ல முன்மாதிரியாக இருந்தார். அவர் அவர்களுக்கு நல்லொழுக்கங்களையும், நியாயத்தையும், அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையையும் கற்றுக் கொடுத்தார்." என்று குறிப்பிடுகின்றார்.

எனவே எமது குடும்ப வாழ்வினை நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் குடும்ப வாழ்கையில் பெற்ற படிப்பினைகளுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்ப வாழ்வியல் தத்துவங்களை ஏற்றுநடக்கக்கூடிய அல்லாஹ்விற்கு நெருக்கமான கூட்டத்தினராக இறைவன் எம்மை ஆக்கி அருள் புரிவானாக!

சிறுகதை



அஷ்–ஷெய்க் முபர்ரிஜ் (நளீமி)

# எமக்கானது...

ஷர்மிளாவின் வீடு குதூகலத்தால் கரை புரண்டு கொண்டிருந்தது. பெண்களுக்கு பெருநாளின் மிகச் சிறந்த சந்தோஷம் மருதாணி இட்டுக் கொள்வதில் தான் இருக்கின்றதல்லவா. ஷர்மிளாவின் வீட்டில் மருதாணி போடும் உற்சவம் மிகவும் கோலாகலமாய் அரங்கேறிக் கொண்டிருந்தது. ஷர்மிளாவின் மூத்த மகளான சம்லா அழகிய டிசைன்களில் மருதாணி போடுவதில் கைதேர்ந்தவள் என்பதால் அவளைச் சுற்றி உற்றார் உறவினர் என பத்துப் பதினைந்து பெண்கள் வட்டமாய் அமர்ந்திருந்தனர். பெண்கள் தரப்பில் இருந்து வந்த மருதாணி வாசமும், அவர்களது பேச்சின் கலகலப்பு ஓசையும், அவ்வப்போது அவிழ்த்து விடப்பட்ட ஜோக்குகளின் சிரிப்பொலியும் சுவர்களில் பட்டுத்தெறித்துக் கொண்டிருந்தது.

மருதாணி போடும் உற்சவத்தில் கலந்து கொள்ளும் ஆசை ஷர்மிளாவின் அடி மனதில் துளிர் விட்டுக் கொண்டிருந்த போதும், நாளை கிடைக்கும் குர்பானி இறைச்சிகளை அடுக்கி வைக்க தனது குளிர்சாதனப் பெட்டியைச் சுத்தம் செய்து இறைச்சிப் பொதிகளை அடுக்கும் அளவு போதிய இடவசதியை ஏற்படுத்த வேண்டியிருந்ததால் அந்த வேலையிலேயே அவள் மும்முரமாக மூழ்கியிருந்தாள். வீட்டுக்கு வெளியே ஷர்மிளாவின் மகன் முஹம்மதும் அவனது நண்பர்களும் துதல் கெண்டிக் கொண்டிருந்தனர். அடுப்பின் அருகே நிற்கும் இருவர் போக மீதமாய் இருந்தோர் சுற்றி அமர்ந்து கரம்போட் ஆடிக் கொண்டிருந்தனர். முற்றத்தின் ஒரு மூலையில் உயர்ந்து வளர்ந்திருந்த தென்னையின் அடியில் கட்டப்பட்டிருந்த மாடு எதைப் பற்றியும் சிந்திக்காமல் அசைபோட்டு படுத்திருந்தது.

ஷர்மிளாவின் கணவர் சலீம் வருடந்தோறும் குர்பானி கொடுக்க மறப்பதில்லை. வழமை போல அப்போதும் குர்பானி கொடுக்கும் வேலையாகத்தான் ஓடிக் கொண்டிருந்தார். மிகப்

பொருத்தமான நிறையையும் வயதையும் கொண்ட மாடொன்றினை வாங்குவதைவிட, அதனை அறுத்து பங்குபோடும் கசாப்பு கடைக்காரரைப் பெற்றுக் கொள்வதுதான் இந்த நாட்களில் சிரம சாத்தியமாக இருக்கின்றது அவருக்கு. இந்த பெருநாள் இரவிலும் அவர் இத்தனை டென்ஷன் ஆக ஓடுவதெல்லாம் கசாப்பு கடைக்காரரிடம் தனக்கென ஒரு நேரத்தை ஒதுக்கிக் கொள்ளத்தான். கடிகார முட்கள் மெது மெதுவாய் சுழல யாருக்கும் தெரியாமல் இரவு மெது மெதுவாய் நழுவிக் கொண்டிருந்தது. சம்லாவை சுற்றி இருந்த பெண்களுக்கெல்லாம் மருதாணி போட்டாயிற்று.


ஆரம்பத்திலேயே மருதாணியிட்ட மர்யம் தாத்தா மருதாணி சிவந்தது போதாது என அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.'உம்மா', 'உம்மா', 'வாங்கோ எல்லாருக்கும் மருதோண்டி போட்டாச்சி. உங்களுக்கும் போட்டாச் சரி' என்று தன் தாயைக் கூவி அழைத்தாள் சம்லா. தன் வேலைகளை எல்லாம் முடித்த கையோடுமருதாணி போடும் உற்சவத்தில் கலந்து கொண்ட ஷர்மிளா 'ஹஜ்ஜுப் பெருநாள் வந்தா போதுமே, எல்லாரும் குர்பானி தான் குடுப்பாங்க, இறைச்சி அடுக்கி வைக்க பிரிட்ஜ்ல இடமும் இல்லை, இனி கொஞ்ச நாளைக்கு இறைச்சியை கறி திண்டு திண்டு நாக்கும் மரத்து போயிரும்..' என்று கூறி சலித்துக் கொண்ட போது தான் போது தான் மரியம் தாத்தா அந்தக் கதையைக் கூறினாள். "ஏம்மா சர்மிளா, போன வருஷம் நசீர் நானா மௌத்தானார் இல்லையா, அவர் மௌத்தான பொறவு அந்த குடும்பம் ரொம்ப கஷ்டத்துல இருக்கு, சோத்துக்கே வழி இல்லாம இருக்குறவங்க பிள்ளைகளை எப்படி படிக்க வைக்கிர என்று மூத்த பிள்ளையை படிப்ப விட்டு நிப்பாட்டிட்டாங்க, இரண்டாவது பிள்ளையை அனாதை இல்லத்தில் சேர்த்துட்டாங்க, அந்த ரெண்டாவது புள்ள அஞ்சு நாள் லீவுல வீட்ட வந்தீக்கி. நஸீர் நாநாட பொஞ்சாதி ரெண்டு மூணு நாளைக்கு தேவையான அரிசையும் காசையும் சேர்த்துட்டு வாறதுக்கு லீவுல வந்த பிள்ளையையும் கூட்டிட்டு பிச்சை எடுக்க போனதாம்... பாவம் எனா.. நானா இருக்கும் வரை நல்லா இருந்த குடும்பம் இப்ப புள்ளையையும் கூட்டிட்டு பிச்சைக்கு போற அளவுக்கு மாறிட்டு..." என்று கூறும் போது மரியம் தாத்தாவின் நாவு தழுதழுத்தது.

நசீர் நாடாவின் குடும்பத்தின் நிலையை கேட்ட சர்மிளா கலங்கிப் போனாள். தங்கள் வீட்டில் குர்பானி கொடுக்கும் நிலையில் இருந்தும் கூட, தங்களது வீட்டு குளிர்சாதனப்பெட்டி தாங்க முடியாத அளவு அதிகமாக இறைச்சிப் பொதிகள் கிடைப்பதையும், துல்ஹஜ் மாதம் வந்துவிட்டால் திகட்டத் திகட்ட தின்று தீர்த்து சலித்துப் போகும் இறைச்சி கறியையும் ஒரு கணம் நினைத்தாள். அதேபோல மறுபுறம், ஒரு சில நாள் அரிசிக்கும் பருப்புக்குமாக தன் குழந்தையோடு பிச்சை

எடுக்கச் செல்லும் நஸீர் நாநாவின் குடும்பத்தின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். தன் தேவைக்கு மேலதிகமாக கிடைக்கும் குர்பானி இறைச்சிகளை நீண்ட நாட்களுக்கு வைத்திருக்கக் கூடிய வகையில் பதனிட்டு நசீர் நானாவின் குடும்பத்திற்கு கொடுப்பது என முடிவு செய்து கொண்டாள். மேலும் தன் கணவனோடு கலந்துரையாடி நஸீர் நாநாவின் மூத்த மகளின் கல்விக்கு உதவி செய்ய வேண்டும் எனவும் தீர்மானித்துக் கொண்டாள்.

அச்சமயம் நபி (ஸல்) அவர்களது நபி மொழியொன்று ஷர்மிளாவின் ஆழ்மனதில் நிழலாடியது. “ஒரு முறை ஆயிஷா நாயகி ஒரு ஆட்டை அறுத்து பங்கிட்ட போது, கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு் அலைஹி வஸல்லம் அவர்கள் “எது மீதமாக இருக்கின்றது?” என் வினவினார். அதற்கு ஆயிஷா நாயகி ‘ஆட்டின் தோள் பகுதி மட்டும் மீதமிருப்பதாக பதிலளித்த போது’ அதன் தோள்பட்டை தவிர மற்ற அனைத்தும் (எமக்காக மறுமையில்) எஞ்சியுள்ளன.” என்று கூறிய ஹதீஸை நினைத்துக் கொண்டாள்.

கவிதை



அஷ்-ஷெய்க் சல்ஜி ( நளீமி )

# உவகைமிகு பெருநாள்...

ஹஜ்ஜுப்பெருநாளே..!
ஈகைத்திருநாளே..!
திகட்டாத வரலாற்றில்
சரித்திர வாழ்நாளே..!

புத்தாடை அணிந்து புதுமணம் பூசி
ஈதுல் அழ்ஹா திருநாள் தொழுகை இன்று
தித்திக்கும் அறுசுவையே
வருடத்தில் அது ஒரு முறையே..!

ஆயிரந்தான் இருந்தாலும்
வரலாறு ஒன்றுண்டு
தியாக நபி குடும்பம்
அது தீ எழுதிய கண்ணீரே

மல்லிகைப்பூ முகர்ந்து
தெரிந்துக்கொள்ளும் மூச்சுப்போல
தேகத்தின் ஆழம் வரை
நெடுக திருநபியின் பூரிப்பே

இறைவனின் கலீலுக்கு
இப்படியே சோதனையா..!
புல்லரிக்கும் உடல் கூடு
அப்பாலும் வெற்றியதைப் பெற்றவரே

கத்திக்கூர் முனை கரம் கொண்டு
கழுத்து வரை தொட்டு வைக்க
கண்ணீர் குடம் சொட்டுச் சொட்ட
ஆஹா..தகப்பன் மகன்
அதுதானே உறவு
அவ்வளவு சிறப்பு

தவமிருந்த பேறு அவர் இஸ்மாயில்
பரிதவிக்க பெற்ற குழந்தை
தவறிவிட வேண்டும் என்று
எவராவது நினைப்பவரோ..!

மனம் கொண்ட மாமனிதர்
கோ அல்லாஹ்வின் கட்டளைக்கு
மாறு ஒன்றும் செய்யவில்லை
மகனாரும் அனுமதித்த அற்புதமே அத்தருணம்

வழியோடு வழிவந்த
வரலாற்றுக் கதையன்று
சரித்திரம் எழுதுண்ட நிஜ வரலாறு
மனம் வழியும் பெரும் ஆறு
மறை போற்றும் மாநபியின்
மகத்தான தியாகங்கள்
மண்ணுலகம் உள்ளவரை
மங்காத திரவியங்கள்

கோடான கோடி மக்கள்
கொண்டாடும் திருநாளே..!
ஈகை எனும் பெருநாளே..!
சரித்திரத்தில் ஒரு நாளே..!

ஹஜ்ஜும் ஹாஜிகளும்
இபாதத்தில் ஈடுபட்டு
ஈகை எனும் உவகையினை
வாகை வாகையாய் சூடட்டும்
பொல்லாத பாவங்கள்
இல்லாது போகட்டும்
பண்பாடும் பக்குவமும் இந்நாளில்
துளி எள்ளாவது சேரட்டும்

நன்நாளே..! பெருநாளே..!
ஈகையின் திருநாளே..!
திகட்டாத வரலாற்றில்
சரித்திர வாழ்நாளே..!





அஷ்-ஷெய்க் சுறாஸ் (நளீமி)

# சர்வதேச முஸ்லிம் மாநாட்டை நோக்கி

மக்காவுக்கான வருடாந்த இஸ்லாமிய யாத்திரையான ஹஜ், சர்வதேச முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு ஆழமான விடயமாக செயல்படுகிறது. இஸ்லாத்தின் வரலாறு மற்றும் மரபுகளில் அதன் வேர்களை ஆழமாகப் பதிந்துள்ள ஹஜ், புவியியல் எல்லைகளைக் கடந்து பல்வேறு பின்னணியில் உள்ள முஸ்லிம்களை இறையச்சம் மற்றும் ஒற்றுமையின் ஆன்மீகப் பயணத்தில் ஒன்றிணைக்கிறது. மேலும் இந்தப்புனித யாத்திரையின் எல்லைக்குள் ஒரு பன்முக மாநாடு உள்ளது. அங்கு ஒற்றுமை, சமத்துவம் மற்றும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு அடிபணிதல் ஆகிய கொள்கைகள் ஒன்றிணைந்து இஸ்லாமிய நம்பிக்கை மற்றும் நடைமுறையின் மூலக்கல்லாக அமைகின்றன.

அதன் மையத்தில், இஸ்லாத்தின் உலகளாவிய சகோதரத்துவத்திற்கு ஹஜ் ஒரு சான்றாகும். ஒவ்வொரு ஆண்டும், உலகின் அனைதது மூலைகளிலிருந்தும் மில்லியன் கணக்கான முஸ்லிம்கள் இந்த புனிதப் பயணத்தை மேற்கொள்கிறார்கள். இன, கலாச்சார மற்றும் மொழித் தடைகளைத் தாண்டி தோளோடு தோள் நின்று முஸ்லிம்கள் பேதமற்று வழிபடுகிறார்கள். விசுவாசிகளின் இந்த ஒருங்கிணைப்பு இஸ்லாத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற பல பண்புகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மேலும் சமூகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு தனிப்பட்ட வேறுபாடுகள் மீதான நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்கிறது.

ஹஜ் அனுபவத்தை ஒரு மாபெரும் சிம்போசியத்துடன் ஒப்பிடலாம். அங்கு முஸ்லிம்கள் ஒன்று கூடி வழிபாடு, சிந்தனை போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். தவாஃப் (கஃபாவைச் சுற்றி வருதல்) முதல் அறபாவில் தரித்தல் வரை ஒவ்வொரு வழிபாடுகளும் ஒரு பொதுவான ஆன்மீக பயணத்தில் ஹாஜிகளை ஒருங்கிணைக்கும் சக்தியாக செயல்படுகின்றது. இந்த பகிரப்பட்ட

அனுபவங்கள் மூலம் ஹாஜிகள் ஏனையவர்களுடன் தொடர்புகளை உருவாக்கி, மொழியியல் மற்றும் கலாச்சார தடைகளைத் தாண்டி நட்புறவு மற்றும் பரஸ்பர ஆதரவை வளர்க்கிறார்கள்.

அதேபோல பல்வேறு பின்னணியில் உள்ள முஸ்லிம்களிடையே உரையாடல் மற்றும் சிந்தனைகளுக்கான தளமாக ஹஜ் விளங்குகிறது. ஹாஜிகள் மக்காவை நோக்கிச் செல்லும்போது அவர்கள் தங்களது இஸ்லாம் பற்றிய அனுபவங்கள், முன்னோக்குகள் மற்றும் விளக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டு வருகிறார்கள். இந்த சிந்தனையின் பன்முகத்தன்மை ஹஜ் அனுபவத்தை வளப்படுத்துகிறது. நம்பிக்கை, ஒழுக்கம் மற்றும் சமூக நீதி போன்ற விஷயங்களில் உரையாடலைத் தூண்டுகிறது. புனித யாத்திரையின் எல்லைக்குள் ஹாஜிகள் தங்களது கருத்துச் சிந்தனைகளில் ஈடுபடுகிறார்கள். அதேபோல இஸ்லாம் பற்றிய தங்கள் புரிதலை ஆழப்படுத்துவதோடு அறிவுசார் பரிமாற்ற உணர்வையும் வளர்க்கிறார்கள்.

சர்வதேச முஸ்லீம் சமூகத்திற்கான ஒரு மாநாடாக ஹஜ்ஜின் முக்கியத்துவம், சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் மேலும் அடிக்கோடிட்டுக் காட்டப்படுகிறது. சமூக அந்தஸ்து, செல்வம் என எதுவாக இருந்தாலும் ஹஜ்ஜின் போது முஸ்லிம்கள் அனைவரும் சமமானவர்கள். ஹாஜிகள் அணியும் எளிய வெள்ளை ஆடைகள் இந்த தனி மனித சமத்துவத்தை அடையாளப்படுத்துகின்றன. அனைத்து விசுவாசிகளின் அடிப்படை சமத்துவத்தை இந்த வெள்ளை ஆடை வலியுறுத்துகிறது. ஹஜ்ஜின் கிரிகைகள் மூலம் முஸ்லிம்கள் தங்கள் மத்தியில் பகிரப்பட்ட மனிதாபிமானத்தையும், மற்றவர்களுடனான அவர்களின் தொடர்புகளில் இரக்கம், பச்சாதாபம் மற்றும் நீதியின் முக்கியத்துவத்தையும் நினைவூட்டுகிறார்கள்.

மிக முக்கியமாக ஹஜ் முஸ்லிம் உம்மா எதிர்கொள்ளும் பல சமகால பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு தளமாகவும் செயல்படுகிறது. இஸ்லாமோபோபியா பற்றிய விவாதங்கள் முதல் சமூக சீர்திருத்தம் மற்றும் அரசியல் மாற்றத்திற்கான அழைப்புகள் வரை, ஹஜ் மாநாடு முஸ்லிம்கள் தங்கள் சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. பிரசங்கங்கள், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் அறிஞர்கள் மற்றும் தலைவர்கள் இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு உண்மையாக இருக்கும் அதே வேளையில் இந்த சவால்களை வழிநடத்துவதற்கான வழிகாட்டுதலையும் நுண்ணறிவையும் வழங்குகிறார்கள்.

மேலும், ஹஜ் முஸ்லிம்களிடையே உலகளாவிய ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புக்கான ஊக்கியாக செயல்படுகிறது. ஹாஜிகள் அந்தந்த சமூகங்களுக்குத் திரும்பும்போது, அவர்கள் ஹஜ்ஜின் ஆன்மாவை எடுத்துச் செல்கிறார்கள். ஒற்றுமை, இரக்கம் மற்றும் அல்லாஹ் மீதான பற்று போன்ற பல்வேறுபட்ட விடயங்களை இங்கு குறிப்பிடலாம். இந்த கூட்டு அனுபவம், தேசிய எல்லைகள் மற்றும் மொழி வேறுபாடுகளைத் தாண்டி ஒரு பெரிய உலகளாவிய முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த உணர்வை வளர்க்கிறது. இவ்வகையில், உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களிடையே ஒற்றுமை மற்றும்

ஒத்துழைப்பின் பிணைப்புகளை வளர்ப்பதற்கு ஹஜ் ஒரு சக்திவாய்ந்த கருவியாக செயல்படுகிறது.

இறுதியாக, ஹஜ் என்பது வெறும் புனிதப் பயணம் மாத்திரமல்ல. இது சர்வதேச முஸ்லிம் சமூகத்திற்கான ஒரு மாநாடு. அங்கு பல்வேறு பின்னணியில் உள்ள விசுவாசிகள் ஒற்றுமை, சமத்துவம் மற்றும் அல்லாஹ்வின் மீதான இறையச்ச உணர்வுடன் ஒன்று கூடுகின்றனர். பகிரப்பட்ட கிரிகைகள், உரையாடல் மற்றும் பிரதிபலிப்பு மூலம் ஹாஜிகள் இணைப்புகளை உருவாக்குகிறார்கள். இஸ்லாத்தைப் பற்றிய அவர்களின் புரிதலை ஆழப்படுத்துவதோடு அவர்களின் சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

அவ்வாறு செய்வதன் மூலம் ஹஜ் உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களுக்கு நம்பிக்கை மற்றும் உத்வேகத்தின் கலங்கரை விளக்கமாக செயல்படுகிறது. இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு அவர்களின் நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.



அஷ்-ஷெய்க் அப்ழல் (நளீமி)

# சில இரகசியங்கள்

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகிய ஹஜ்ஜானது ஐந்தாவதும், இறுதியானதுமான கடமையாகக் காணப்படுகின்றது. மேலும் இஸ்லாம் கூறுகின்ற சகலவிதமான வணக்கங்களும் சங்கமிக்கின்றதொரு தளமாகவும் இந்த ஹஜ் எனும் வணக்க வழிபாடு அமைந்துள்ளது.

ஹஜ்ஜானது ஏனைய வணக்க வழிபாடுகளிலிருந்து சற்று வேறுபட்டு இறைவனுக்காக தங்களை முழுமையாகத் தியாகம் செய்த ஓர் குடும்பத்தினுடைய தியாக உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற தனித்துவமானதொரு வணக்க வழிபாடாகக் காணப்படுகின்றது. இப்ராஹீம் (அலை) அவரது புதல்வர் இஸ்மாயில் (அலை) மற்றும் அவரது துணைவியார் ஹாஜரா (அலை) ஆகியோரின் தியாகங்களின் உச்சகட்ட செயற்பாடுகளை ஒட்டுமொத்த மனித சமூகத்திற்கும் படம்பிடித்துக் காட்டக்கூடிய வகையில் ஹஜ்ஜினுடைய கிரியைகள் அமைந்துள்ளன. அது மட்டுமல்லாமல் அதனுடைய கிரியைகளுக்குள் இன்னும் பல இரகசியங்களும் இலக்குகளும் பொதிந்து காணப்படுகின்றன.

மனிதர்களுக்கு மத்தியில் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தினையும் நிலை நாட்டுவதற்கான சர்வதேச ரீதியாக விடுக்கப்படுகின்ற ஓர் உன்னதமான அழைப்பாகவே இந்த ஹஜ் எனும் வணக்க வழிபாடு விளங்குகின்றது. மேலும் சர்வதேச ஒற்றுமையின் அடையாளச் சின்னமாகவும் இதுவே காணப்படுகின்றது.

பட்டம், பதவி, குலம், கோத்திரம், வெள்ளை, கறுப்பு, ஆண்டான், அடிமை போன்ற அனைத்து வகையான வேறுபாடுகள் மற்றும் பாகுபாடுகளுக்கு அப்பால் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டக் கூடியதாகவே இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் காணப்படுகின்றன. இதனையே கலாநிதி அகமது ரய்சூனி அவர்கள் "இஸ்லாம் ஐந்து அடிப்படைகளின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.." என்ற ஹதீஸிற்கு விளக்கமளிக்கின்ற போது "கலிமா, தொழுகை,

நோன்பு, ஸகாத், ஹஜ் என்கின்ற ஒவ்வொரு கடமையும் கட்டாயமாக நடைபெற வேண்டியவை", கூட்டுவடிவில் நடைபெற வேண்டியவை, திட்டமிட்ட ஒழுங்கில் நடைபெற வேண்டியவை என்கின்றார்.

இறைவனுடைய அழைப்புக்கு பதிலளிக்க கூடியதாகவும் அவனுக்கான தங்களுடைய முழுமையான அடிமைத்துவத்தினை வெளிப்படுத்தக் கூடிய ஒன்றாகவுமே ஹாஜிகள் ஹஜ்ஜின் போது மொழிகின்ற "லப்பைக் அல்லாஹுªம்ம லப்பைக்" (அல்லாஹ்வே நான் உன்பால் ஆஜராகி விட்டேன்) என்ற வார்த்தைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஹஜ்ஜின் போது ஹாஜிகள் அணிகின்ற இஹ்ராம் ஆடையானது ஒரு மனிதனை அவனுடைய அகங்காரம், பெருமைத்தனம் போன்ற சகலவகையான உள நோய்களிலிருந்தும் அவனை சுயவிசாரணை செய்து விழிப்படையச் செய்வதுடன், இஹ்ராம் கட்டியதன் பின்னர் அவனுக்கு ஆகுமாக்கப்பட்ட சில விடயங்கள் கூட அவனுக்கு தடுக்கப்பட்டதாக மாற்றிவிடுகின்றன. இது ரமழானுக்குப் பின்னர் அவனுக்கு கிடைக்கின்ற மற்றுமொரு சிறந்ததொரு பயிற்சிப் பாசறையாகவும் அமைகின்றது.

ரமழானின் பிரதான இலக்காகிய, ரமழான் கட்டியெழுப்பிய "தக்வா" எனும் இறை பிரக்ஞை இங்கும் கட்டியெழுப்பப்படுகின்றது. இதனையே அல்லாஹ் பின்வருமாறு தனது அருள்மறையில் குறிப்பிடுகின்றான்.

"..மேலும், யாரேனும் அல்லாஹ் ஏற்படுத்திய புனிதச் சின்னங்களுக்கு கண்ணியம் அளிப்பாராயின் திண்ணமாக, அது இதயங்களில் உள்ள இறையச்சத்தால் விளைவதாகும்." (அல்குர்ஆன் : 22:32)

ஹஜ்ஜினுடைய அனைத்து வகையான கிரியைகளும் இறைநினைவினை (திக்ருல்லாஹ்வினை) ஏற்படுத்தக் கூடியவைகளாகவே காணப்படுகின்றன. இதனைப் பின்வரும் அல்குர்ஆனிய வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. "அவர்களுக்காக அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நன்மைகளை அவர்கள் காணட்டும். மேலும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய கால்நடைகளை சில குறிப்பிட்ட நாட்களில் அவனது பெயர் கூறி (அறுத்தி)ட வேண்டும். அவற்றிலிருந்து அவர்களும் உண்ண வேண்டும். வறியவர்களுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் அளிக்க வேண்டும்." (அல்குர்ஆன் : 22:28)

ஜாஹிலிய்யாக் காலத்தில் கஃபாவில் காலங்காலமாக இடம்பெற்று வந்த இணைவைப்பிற்கான பாரியதொரு மறுப்பாக ஹஜ்ஜின்போது ஹாஜிகள் கஃபாவினை வலம்வருகின்ற "தவாப்" எனும் கிரியை அமைந்துள்ளதுடன், சபா – மர்வாக்கிடையில் ஹாஜிகள் ஓடுகின்ற தொங்கோட்டமானது அன்னை ஹாஜரா (அலை) அவர்களின் தியாகத்தினை நேரடியாக உணரச் செய்வதுடன் மறுமையில் மனிதனின் நிலையையும் நினைவூட்டுகின்றது.

“ஹஜ் என்றாலே அரபா” என்பது நபிமொழி. இங்கு “அரபா” மைதானமானது நாளை மறுமையில் மனிதர்கள் அனைவரும் ஒன்று கூட்டப்படுகின்ற “மஹ்ஷர்” மைதானத்தின் காட்சியினை சித்தரிக்கக் கூடியதாகவே அமைந்து காணப்படுகின்றது.

மேலும் மினாவிலுள்ள ஜம்ராக்களில் ஷைத்தானை நோக்கி வீசி அடிக்கப்படுகின்ற கற்கள் ஒவ்வொன்றும் அனைத்து வகையான மனோ இச்சைகள் மற்றும் ஷைத்தானுடைய தீண்டல்களை எதிர்த்து செயற்படுவதற்கான மனவலிமையினையும் தைரியத்தினையும் வழங்குகின்றது.

ஹஜ் கிரியைகளின் நிறைவின்போது இறைவனுக்காக கொடுக்கப்படுகின்ற குர்பானிகள் கூட இறைவனுக்காக எதனையும் செலவு செய்கின்ற மனோநிலையை ஏற்படுத்துவதுடன், தக்வாவிற்கான அடிப்படையாகவும் அமைந்து காணப்படுகின்றது. இதனை அல்லாஹ்தனது அருள்மறையில் பின்வருமாறு எடுத்தியம்புகின்றான்.

“(எனினும்), குர்பானியின் மாமிசங்களோ, அவற்றின் உதிரங்களோ அல்லாஹ்வை ஒரு போதும் அடைவதில்லை. ஆனால் உங்களுடைய தக்வா (பயபக்தி) தான் அவனை அடையும்..” (அல்குர்ஆன் : 22:37)

மேலும் ஹஜ் எனும் வணக்கவழிபாடு ஒரு மனிதனை முழுமையாக அவனுடைய பாவக்கறைகளில் இருந்து சுத்தப்படுத்தி, அன்று பிறந்த பாலகனைப் போன்று மாற்றுகின்ற மிக உன்னதமானதொரு வணக்க வழிபாடாகவும் காணப்படுகின்றது. இது பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

“யார் தாம்பத்திய உறவு கொள்ளாமலும் எந்தப் பாவமும் செய்யாமலும் இந்த ஆலயத்தை ஹஜ் செய்கிறாரோ அவர் அன்று பிறந்த பாலகனைப் போன்று திரும்புகிறார்.” இதனை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஸஹீஹுல் புகாரி,1820)

எனவேதான், நம்மை எதிர்நோக்கியுள்ள இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் இறுதியானதும், தனித்துவமானதுமான ஹஜ்ஜும் அதனுடைய கிரியைகளும் மேற்குறிப்பிட்டது போன்ற பலவகையான இரகசியங்களையும், இலக்குகளையும் தன்னகத்தே உள்ளடக்கியவைகளாகவே காணப்படுகின்றன. இது இஸ்லாத்தினது தனித்துவமான சிறப்பம்சத்தினை இம்முழு மனித சமூகத்தினருக்கும் வெளிக்காட்டக் கூடியதாகவும் அமைந்துள்ளது.



அஷ்–ஷெய்க் அப்துல்லாஹ் (நளீமி)

# ஹஜ் முகவர்கள்


இஸ்லாத்தின் கடமைகளில் ஐந்தாவது கடமையாக ஹஜ் காணப்படுகின்றது. இது வசதி படைத்த மற்றும் உடல் ஆரோக்கியம் உள்ள ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். இந்த கடமையை நிறைவேற்றுவதற்காக தொன்று தொட்டு வருடா வருடம் எமது நாட்டில் இருந்தும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் ஹஜ்ஜக்கு செல்கின்றார்கள். ஆரம்ப காலங்களில் ஹஜ் பயணத்திற்காக யாத்திரிகர்கள் கப்பலில் மாதக்கணக்கில் தமது காலத்தை செலவழித்துச் சென்றார்கள். ஆனால் இன்று இந்தப் பயணம் மிக இலகுவாக்கப்பட்டு விமானம் மூலம் சில மணித்தியாலங்களில் செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த உயர்தரமான கடமையை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பாகவும் உதவியாகவும் வழிகாட்டிகளாகவும் பல தனிநபர்களும் பல நிறுவனங்களும் காணப்படுகின்றன. அந்த வகையில் இந்த ஹஜ் கடமையை முறையாக வழி நடத்துகின்ற ஒவ்வொரு தனி நபரரும் ஹஜ் முகவர்களும் பாராட்டத்தக்கவர்களாகவும் நன்றிக்குரியவர்களாகவுமே காணப்படுகின்றார்கள். அந்த வகையில் எமது நாட்டில் பல முகவர் நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவர்களினூடாக பல ஆயிரக்கணக்கானவர்கள் ஒவ்வொரு வருடமும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக புனித மக்காவிற்கு செல்கின்றார்கள். இந்த ஹஜ் முகவர்களின் அயராத உழைப்பு அவர்களின் தியாகம் என்பவை ஹஜ்ஜாஜிகளுக்கு அவர்களது கடமையை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்கின்றது. ஹஜ் செய்வதற்கு உதவியாகவும் ஒத்துழைப்பாகவும் வழிகாட்டியாகவும் இருப்பவருக்கு கிடைக்கக்கூடிய நன்மைகளை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த கூலிகளையும் வெகுமதிகளையும் எமது நாட்டு முகவர்களும் பெற்றுக் கொள்வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஹஜ் முகவர்கள் மூலமாக இவ்வாறான ஒரு பாரிய பணி இடம்பெறுகின்ற அதே வேளை இந்த ஹஜ் முகவர்கள் மீது  பல குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. பொதுவாக இந்த முகவர்கள் ஹஜ்ஜாஜிகளை சுரண்டுவதாகவும், எத்தனையோ இடங்களில் ஹஜ் முகவர்கள் அவர்களின் வாக்குறுதிகளை மீறுவதாகவும், இன்னும் பல குற்றச்சாட்டுகளையும் எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் ஹஜ் முகவர்களின் ஊடாக செல்ல இருப்பவர்கள் ஹஜ்ஜுக்கு செல்வதற்கு முன்னால் இங்கு நாட்டிலே பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள். ஹஜ்ஜுக்கு செல்வதற்கு ஒருவர் தயாராகி தனது ஆவணங்களை முகவர்களுக்கு கொடுத்ததிலிருந்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக  விண்ணப்பிக்கின்ற அனைவருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஆனால் சில முகவர்கள் போலியான வாக்குறிதிகளை வழங்கி, விண்ணப்பதாரிகளை இறுதியில் ஏமாற்றத்தில் போடுகின்றனர். இந்த சிக்கலான நிலைமை ஏற்படலாம் என அறிந்தும் சில முகவர்கள் இந்ந கைங்கரியத்தில் ஈடுபடுவதுதான் ஏற்றுக் கொள்ள முடியாதது.

அதேபோல் ஹஜ் செய்வதற்கு அதிக தொகையை சில ஹஜ் முகவர்கள் வசூலிக்கின்றனர். இந்த வருடம் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான ஆகக் குறைந்த தொகையாக நான்கு லட்சம் இலங்கை ரூபாயையும் அதி கூடிய தொகையாக 9 லட்சம் இலங்கை ரூபாயையும்  சவுதி அரசாங்கம் நிர்ணயித்துள்ளது. இது ஏனைய செலவுகள் தவிர்த்து சவுதி அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய தொகையாகும். இலங்கையில் 16 இலட்சம் ரூபாவிலிருந்து ஹஜ்ஜுக்கான பெக்கேஜ்கள் ஆரம்பிக்கின்றன. சென்ற வருடம் ஹஜ்ஜுக்கு சென்ற ஒருவர் ஹஜ்ஜுக்கான தொகையை இலங்கையில்  இன்னும் குறைக்கலாம் என்று தனது ஆதங்கத்தை தெரிவித்தார். ஹஜ் செய்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற போட்டித் தன்மையை இவர்கள் சந்தர்ப்பமாக பயன்படுத்தி அதிக பணத்தை வசூல் செய்கின்றனர். இது தொடர்பாக நீண்ட காலமாக பிரச்சினைகள் எமது நாட்டில் எழுந்து வருகின்றன. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாட்டில் ஹஜ் செய்வதற்கான தொகை அதிகமாகும். எல்லா முகவர்களும் இவ்வாறில்லை. ஒரு சில முகவர்களே இவ்வாறு மக்களை நெருக்கடிக்குள் தள்ளக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுவதாக இருந்தால் கடந்த வருடங்களில் இலங்கை ரூபாயின் பெறுமதி குறைந்திருந்த காலத்தில் அறவிட்ட அதே தொகையையே தற்போது ரூபாவின் பெறுமதி கூடியிருக்கும் காலப்பகுதியிலும் அறவிடுகின்றனர். இதன் மூலமாக முகவர்கள் அதிக இலாபத்தை பெற்றுக் கொள்கின்றனர். இங்கு ஹஜ்ஜாஜிகள் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு சில உதாரணங்களை குறிப்பிடலாம்.

மேலும் ஹஜ்ஜுக்கு வயது முதிர்ந்தவர்கள் செல்லும்போது முகவர்கள் ஒரு வாக்குறுதியை கொடுக்கின்றார்கள். ஆனால் அந்த வாக்குறுதி முறையாக நிறைவேற்றப்படுவதில்லை. அதுதான் குறிப்பாக வயது முதிர்ந்த ஹஜ்ஜாஜிகளை தாங்கள் நன்றாக பார்த்துக் கொள்வதாகவும் அனைத்து விதமான உதவிகளையும் செய்வதாகவும் வாக்குறுதி அளிக்கின்றனர். என்றாலும் ஹஜ்ஜின் போது




ஏற்படுகின்ற சில சிரமங்கள் காரணமாக அவர்கள் கூறிய வழிகாட்டல்கள் வழங்கப்படாமலும் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகுவதையும் கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களினூடாக எங்களால் புரிந்து கொள்ள முடியும். எத்தனையோ முதியவர்கள் காணாமல் போகின்ற சந்தர்ப்பங்கள் கூட நடைபெற்றுள்ளன. இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் தங்களால் வழங்கப்படும் வாக்குறுதிகளை சரியாக நிறைவேற்ற முடியாது என்று அறிந்தும் முகவர்கள் வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதாகும்.

மேலும் ஹஜ்ஜின் போது அங்கு வழங்கப்படுகின்ற உணவுகள் தொடர்பான முறைப்பாடுகள் ஒவ்வொரு வருடமும் இருந்து கொண்டே இருக்கின்றன. ஹஜ்ஜிற்கு செலுத்துகின்ற பணத்தின் பெறுமதிக்கு ஏற்ப அங்கு ஹஜ்ஜாஜிகளுக்கான ஏற்பாடுகள் பிரிக்கப்பட்டிருக்கும். அதில் ஆக குறைந்தவர்களுக்கு முறையான உணவோ அல்லது தங்குவதற்கான போதுமான ஏற்பாடுகளோ சரியாக வழங்கப்படுவதில்லை. மிக குறுகிய ஓர் இடமே தூங்குவதற்கு வழங்கப்படுகின்றது. குறிப்பாக மினாவில் இவ்வாறான நெருக்கடி ஏற்படுவதாக ஹஜ்ஜாஜிகள் குறிப்பிடுகின்றனர். இது தொடர்பில் முகவர்களோ அல்லது உரிய தரப்பினரோ நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை. அதேபோல் சில முகவர்களின் பாராமுகம் காரணமாக ஹஜ்ஜாஜிகளுக்கான தங்குமிடங்கள் மிகத் தொலைவில் கிடைக்கப் பெறுகின்றன. இதற்கு காரணம் முகவர்களின் அசமந்த போக்கும் கவனயீனமுமேயாகும்.

எது எவ்வாறு இருப்பினும் ஹஜ் முகவர்கள் ஒரு புனிதமான பணியை மேற்கொள்கின்றார்கள். உண்மையில் அவர்களை பாராட்டத்தான் வேண்டும். அவர்கள் தங்களது பிழைகளையும் குறைகளையும் கண்டறிந்து அவற்றை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கும், குறைத்துக் கொள்வதற்குமான முயற்சிகளில் ஈடுபடுவார்களேயானால் எதிர்காலத்தில் வினைத்திறன் மிக்க சேவையை வழங்கவும் ஹஜ்ஜாஜிகளின் சிரமங்களை குறைக்கவும் முடியும்.



அஷ்-ஷெய்க் சகி அஹமட் (நளீமி)

# தெளிவான வெற்றி

இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்கள் ஏகத்துவக் கொள்கையை பகிரங்கமாக எடுத்துரைக்க ஆரம்பித்த பின்னர் நபியவர்களும் அவர்களது தோழர்களும் புனித கஃஅபாவில் நுழைவதற்கும் அங்கு தொழுவதற்கும் தடை விதிக்கப்பட்டனர். அதை மீறிச் செயற்படுபவர்கள் குறைஷிக் காபிர்களால் கடுமையாக தாக்கப்பட்டனர். குறைஷிகளின் இவ்வாறான அத்துமீறல்களும் அட்டூழியங்களும் ஹிஜ்ரி 6ம் ஆண்டு வரை தொடர்ந்துக் கொண்டிருந்தது. இவ்வாறான அத்துமீறல்களின் அடுத்த கட்டமாக, உம்ரா செய்வதற்காக மதீனாவிலிருந்து வந்த நபி (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் மக்காவின் எல்லைப்பகுதியில் குறைஷிக் காபிர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இந்த கொடுஞ்செயலின் விளைவாகவும், இறைத்தூதர் (ஸல்) அவர்களது நுண்ணறிவு மிக்க சிந்தனையினாலும் அல்லாஹ்வினால் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட ஓர் தெளிவான வெற்றியாகவே இஸ்லாமிய வரலாற்றில் “ஹுதைபிய்யா உடன்படிக்கை” பார்க்கப்படுகின்றது.

ஹுதைபிய்யா உடன்படிக்கையை பற்றி தெளிவாக கூறவேண்டுமானால்.. ஹிஜ்ரி 6ம் ஆண்டில் துல்கஃதா மாதத்தில் நபி (ஸல்) அவர்களோடு உம்ரா செய்வதற்காக மக்காவை நோக்கி சுமார் 1400 நபித்தோழர்கள் பயணித்தனர். இதனை அறிந்த குறைஷிக் காபிர்கள் நபி (ஸல்) அவர்களை தடுத்து நிறுத்தும் முகமாக பெரும் படையொன்றை திரட்டினார்கள். இதனை தனது தோழர்கள் மூலமாக அறிந்துகொண்ட நபி (ஸல்) அவர்கள், தாங்கள் உம்ரா செய்வதற்காகத்தான் மக்காவிற்கு வருகிறோம் என்பதனை தெளிவுபடுத்தும் விதமாக உஸ்மான் (ரழி) அவர்களை தனது பிரதிநிதியாக மக்காவிற்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

நபி (ஸல்) அவர்களின் தூதராகச் சென்ற உஸ்மான் (ரழி) அவர்கள் மக்காவை அடைந்ததும் மக்காவின் இறை நிராகரிப்பாளர்களால் கொல்லப்பட்டதாக வதந்தி பரவியது, இதன் விளைவாக நபி (ஸல்)

அவர்களும் தோழர்களும் உஸ்மான் (ரழி) அவர்களின் உயிருக்காகத் தங்கள் உயிரை அர்ப்பணிப்போம் என்று தங்களுக்கு மத்தியில் சத்தியம் செய்து கொண்டார்கள். இந்த நிகழ்வு இஸ்லாமிய வரலாற்றில் “பைஅத்துர் ரிள்வான்” என்று அழைக்கப்படுகிறது. பின்னர் உஸ்மான் (ரழி) பற்றிய செய்தி ஒரு வதந்தி என்று தெரிந்த பிறகு மக்காவை நோக்கிய பயணத்தை நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்தார்கள். நபி (ஸல்) அவர்களது இந்த புனிதமான பயணத்தை நிறுத்த முயற்சித்த காபிர்கள் காலித் பின் வலீதின் தலைமையில் ஒரு படைப்பிரிவை அனுப்புகிறார்கள். மக்கா காபிர்களின் இந்த படையெடுப்பை அறிந்த நபி (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா பள்ளத்தாக்கின் எல்லையில் முகாமிடுகிறார்கள். ஆனால் இந்த புனிதமான பயணத்தின்போது, போரிட விரும்பாத நபி (ஸல்) அவர்கள் குறைஷிக் காபிர்களோடு சமாதானமான ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்காக மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் சிந்தித்து செயல்படுகிறார்கள். நபி (ஸல்) அவர்கள் தனது எண்ணத்தை முன்வைத்ததும், சமாதான உடன்படிக்கைக்கான வேண்டுகோளை சுஹைல் இப்னு அம்ர் ஏற்றுக்கொண்டார். பின்னர் நபியவர்கள் உடன்படிக்கைகளை எழுத தயாராகிறார்கள். ஆனாலும் இரு தரப்பினருக்கும் நன்மை பயக்கும் வகையில் எழுதப்பட வேண்டிய ஒப்பந்தத்தை, நிராகரிப்பாளர்கள் தங்களின் இஷ்டப்படி எழுத நிபந்தனைகளை விதிக்கிறார்கள்.

தொடர்ந்து ஒவ்வொரு நிபந்தனையும் சொல்லப்படும் போதும் காபிர்கள் அதற்கு மறுப்புத் தெரிவிப்பதும் மாற்றமாக சொல்வதுமாகவே இருந்தனர். பின்னர் தமக்கு சார்பான ஓர் ஒப்பந்தத்தினை மக்கா காபிர்கள் முன்வைத்து, தாம் முஸ்லிம்களை வீழ்த்திவிட்டதாக சந்தோசமடைந்தனர். ஆனால் அப்போது அவர்களுக்குத் தெரியாது இந்த ஒப்பந்தம் தமக்கு பெரும் தலைவலியாக அமையும் என்பது. இந்த ஹுதைபிய்யா உடன்படிக்கையின் நிபந்தனைகள் பின்வருமாறு அமைந்தன.

**நிபந்தனை – 01**

முஸ்லிம்கள் இவ்வருடம் மக்காவில் நுழையக்கூடாது. அடுத்த ஆண்டு தான் உம்ராவுக்கு வரவேண்டும்.

**நிபந்தனை – 02**

குறைஷியரில் எவரேனும் தமது உத்தரவின்றி மதீனாவுக்கு வந்துவிட்டால் அவரைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். அதற்கு மாறாக முஸ்லிம்களில் எவரேனும் குறைஷிகளிடத்தில் வந்துவிட்டால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள்.

**நிபந்தனை – 03**

இரு தரப்பினரும் தங்களின் மற்ற கோத்திரத்தாருடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளலாம். அதாவது, குறைஷியரின் நண்பர்களை முஸ்லிம்கள் எதிர்ப்பது கூடாது. அவ்வாறே முஸ்லிம்களின் நண்பர்களையும் குறைஷியர் தாக்கக் கூடாது.

**நிபந்தனை – 04**
அடுத்த வருடம் உம்ராவுக்கு வரும்போது நிராயுதபாணிகளாக மக்காவுக்குள் வந்து குறைஷிகள் விரும்புகின்ற வரை மட்டுமே, அதாவது மூன்று தினங்கள் மட்டும் தங்கியிருக்கலாம்.

**நிபந்தனை – 05**
இரு தரப்பினரும் பத்தாண்டு காலத்திற்கு தமக்கு மத்தியில் போரில் ஈடுபடக்கூடாது.

இந்த நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்படிக்கை நபித்தோழர்களின் மனங்களை மிகவும் பாதிப்படையச் செய்தது. காரணம், இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, கொடூரமான சித்ரவதைகளுக்கு தினம் தினம் ஆளாகி வந்த முஸ்லிமான சகோதரர் அபூஜன்தல், நபி (ஸல்) அவர்களிடம் பாதுகாப்புக்கேட்டு வந்த போதும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காரணத்தால், தங்கள் கண் முன்னால் மக்கத்து நிராகரிப்பாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்ட கொடுமை நபித்தோழர்களுக்கு பெரும் கவலையை கொடுத்தது.

மேலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளில் நபி (ஸல்) அவர்கள் மிகவும் இறங்கிப்போன விதமும், குறைஷிகள் ஒவ்வொரு நிபந்தனையிலும் இயல்புக்கு மாற்றமாக முஸ்லிம்களுக்கு பாதகமாக அமையும் நிபந்தனைகளை விதித்ததும் அவற்றை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக்கொண்டதும் நபித்தோழர்கள் மனதை பெரும் வடுவாய் தைத்தது. இவை அத்தனைக்கும் நபி (ஸல்) அவர்களின் சமாதான உடன்படிக்கைக்கு இணங்கி அவர்களுக்கு கட்டுப்படவேண்டும் என்பதற்காகவே, அந்த அநியாயமான நிபந்தனைகளுக்கு எதிராக தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்து குரல் கொடுக்க முடியாமல் போய்விட்டதே என்ற ஆதங்கமும் நபித்தோழர்களை வெகுவாய் பாதித்தது.

நபித்தோழர்கள் அனைவரும் இந்த ஹுதைபிய்யா உடன்படிக்கை தங்களுக்கு தோல்விதான் என்று எண்ணிக்கொண்டு திரும்பும்போது, எல்லாம் வல்ல அல்லாஹ் அதனை “வெற்றி” என்று கூறி, ஒரு பெரும் அத்தியாயத்தையே அருளி நபி (ஸல்) அவர்களையும் நபித்தோழர்களையும் ஆறுதல் படுத்தினான்.

“(முஹம்மதே!) உமது பாவத்தில் முந்தியதையும் பிந்தியதையும் உமக்காக அல்லாஹ் மன்னிப்பதற்காகவும், தனது அருட்கொடையை உமக்கு முழுமைப்படுத்திடவும், உமக்கு நேரான பாதையைக் காட்டுவதற்காகவும், அல்லாஹ் மகத்தான உதவியை உமக்குச் செய்வதற்காகவும், தெளிவான ஒரு வெற்றியை உமக்கு நாம் அளித்தோம்.” (48:1-3)

தொடர்ந்து வந்த வருடங்களில் மேற்படி அல் குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் வாக்குறுதியளித்த வெற்றியை சுவைக்கும் பாக்கியத்தை நபித்தோழர்கள் பெற்றனர். ஒப்பந்த நிபந்தனைப்படி நபி (ஸல்) அவர்கள் அடுத்த ஆண்டு தங்களது தோழர்களோடு உம்றாவை நிறைவேற்றினார்கள்.

உண்மையிலேயே இந்த வெற்றி நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு மகத்தான வெற்றியாகும். கஃபா தங்களுடையது. இங்கே முஹம்மதுக்கோ அவரது தோழர்களுக்கோ எந்தவித உரிமையும் கிடையாது என்று முஸ்லிம்களை மட்டம்தட்டிப் பேசியவர்களிடம், கஃபா மீதான தங்களுடைய உரிமையை நிலைநாட்டிவிட்டுப் போய்விட்டார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள். இனிமேல் எப்போதும் ஹஜ் செய்யலாம், உம்ரா செய்யலாம் என்பதையும் நிலைநாட்டினார்கள். இது நபி (ஸல்) அவர்களுக்கு ஹுதைபிய்யா உடன்படிக்கையின் மூலம் கிடைத்த முதல் வெற்றியாகும். கஃபா ஆலயத்திற்குள் வரவிடாமல் தடுத்திருந்ததன் மூலம், தாங்கள் சாதித்து விட்டதாக குறைஷிகள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த ஒரே நிபந்தனையும் அவர்களுக்கு தெளிவான தோல்வியாகவே அமைந்தது.

தொடர்ந்து மக்கா காபிர்களோடு கைகோர்த்திருந்த பல கோத்திரங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதும் நபி (ஸல்) அவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டதும் மக்கா காபிர்களுக்கு பெரும் பிரச்சினையாக மாறியது. இதற்கு எதிராக செயற்பட முடியாதவாறு அவர்களது உடன்படிக்கை அவர்களுக்கே தடையாய் அமைந்தது. பின்னாளில் இதுவே மக்கா வெற்றிக்கும் ஆரம்பப் புள்ளியாய் அமைந்தது.

எனவே முஸ்லிம்கள் அடைந்த இந்த சுமூகமான வெற்றியைத்தான் அல்லாஹ் தனது புனித அல் குர்ஆனில் “உமக்குத் தெளிவான ஒரு வெற்றியை அளித்தோம்” (அல் குர்ஆன் -48:1) என்ற வசனத்தில் குறிப்பிடுகின்றான். எனவே ஹுதைபிய்யா உடன்படிக்கை என்பது இஸ்லாமிய வரலாற்றில் ஓர் தெளிவான வெற்றியென்பதில் ஐயமில்லை.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால் ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை பெரிதும் உயர்ந்தது. நபி (ஸல்) அவர்கள் தன் இலக்காக கொண்டது இஸ்லாம் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதையல்ல. மக்களை நல்வழிப்படுத்துவதையும், அவர்களது இதயங்களை இஸ்லாத்தை நோக்கி திருப்பிவிடுவதையும், அவர்களை நரகின் கொடூரத்திலிருந்து காப்பாற்றுவதையும் நோக்கமாக கொண்டிருந்தார்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கை அதற்கு சிறப்பாக வழி வகுத்தது. எனவேதான் அல்லாஹ் அதனை மகத்தான வெற்றி என்று குறிப்பிடுகின்றான். எந்தவொரு பிரச்சினையையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்க்காமல் இரண்டாவதாக ஒரு கண்ணோட்டத்துடன் பார்க்கவும் அணுகவும் தீர்வு காணவும் மக்கள் முயற்சி செய்ய வேண்டும் என்பதை ஹுதைபிய்யா உடன்படிக்கை உணர்த்தி நிற்கின்றது.

நூல் அறிமுகம்



அஷ்-ஷெய்க் அப்துர்ரஹ்மான் (நளீமி)

# ஹஜ்ஜும் மறுமை நாளும்

உண்மையில், ஹஜ்ஜினுடைய நலன்களில் மிக முக்கியமானது அது மறுமை நாளை ஞாபகமூட்டுவதாகும். அது ஹாஜிகள், ஹாஜியல்லாதவர்கள் என்ற வேறுபாடின்றி முழுமொத்த சமூகத்திற்கும் பொதுவானதாக அமைகிறது. ஹஜ்ஜும் மறுமை நாளும் பல ஒத்த தன்மைகளைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒரு ஹாஜிக்கு அவர் ஹஜ்ஜில் தரித்துச் செல்லும் பல இடங்கள் மறுமை நாளை ஞாபக மூட்டுகிறது. ஹாஜிகள் ஹஜ்ஜிலிருந்து திரும்பி வந்ததும் பல மனிதர்களுக்கு இவ்விடங்களை ஞாபகமூட்டுகின்றனர். இவ்வாறு, பலரும் மறுமை நாள் குறித்து ஞாபகமூட்டப்படுகின்றனர். எமது உம்மத்தில் ஹஜ் கடமையை நிறைவேற்றியவர்களில் ஹஜ்ஜில் அவர்கள் தரித்து வந்த இடங்களை நினைவூட்டுகிற ஓரிருவரையாவது தெரியாமல் யாரும் இருக்க முடியாது. ஹஜ்ஜின் மீதான நேசத்தை எல்லா முஸ்லிம்களுடைய உள்ளத்திலும் அல்லாஹ் ஏற்படுத்தியிருக்கிறான். இதனால் தான் பெரும்பாலான முஸ்லிம்கள் ஹஜ் செய்வதற்கு அதீத வேட்கையுடையவர்களாக இருக்கின்றனர். அதேபோல், முஸ்லிம்கள் ஹஜ் செய்ய கூடியவர்களை அவர்களது பிரயாணத்தின் போது வழியனுப்புவதும் அவர்கள் திரும்பி வந்ததும் அவர்களை வரவேற்பதும் அவர்களை தரிசிப்பதும் அவர்களிடமிருந்து கதைகளை கேட்பதும் இதன் காரணத்தினாலேயாகும். இவ்வாறு, இச் சமூகத்தில் மிகப்பெரும் நலன்களை உண்டாக்கும் மறுமை நாளை ஞாபகமூட்டக்கூடிய ஒரு பருவ காலமாக ஹஜ் காலம் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. ஹஜ்ஜுக்கும் மறுமை நாளுக்கும் இடையிலான ஒத்த தன்மையின் சிறப்பம்சங்களை பார்ப்பதற்கு முன்பு ஒரு விடயத்தை கூற வேண்டியிருக்கின்றது. உலகில் நடக்கக் கூடிய மிகப்பெரும்பாலான பாவங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமாக அமைவது மறுமை நாள்

குறித்த மறதியாகும். அது ஒவ்வொரு மனிதனும் தான் உலகில் செய்தவை குறித்த கேள்வி கணக்கிற்கு ஆளாகும் நாளாகும். அந்நாளில் ஒரு மனிதன் பொறுப்புச் சுமத்தப்பட்ட ஆரம்ப நொடிகள் முதல் அவனது மரணத் தருவாய் வரையான காலப்பகுதி விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

“அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழி தவறிச் சென்றவர்களுக்கு அவர்கள் விசாரணை செய்யப்படும் நாளை மறந்ததற்காக கடுமையான வேதனை உண்டு.” (சாத்:26)

விசாரணை நாளை மறப்பதென்பது மிகப்பெரும் அனர்த்தமாகும். கடுமையான பாவமாகும். மக்கள் இந்நாளை ஞாபகப்படுத்துவார்களாயின் மனித சமுதாயம் எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சனைகளுக்கான தீர்வையும் கண்டு கொள்வார்கள். இதனால்தான், நபி (ஸல்) அவர்கள் மக்காவில் தனது தஃவாவை ஆரம்பித்த ஆரம்ப நாட்களில் ஆரம்பமாக ஞாபகமூட்டியது மறுமை நாளையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நீங்கள் தூங்குவதைப் போல் மரணித்து விடுவீர்கள். தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதைப் போல் எழுப்பப்படுவீர்கள். நீங்கள் செய்தவற்றை கொண்டு விசாரிக்கப்படுவீர்கள். நிச்சயமாக அது ஒன்றில் நிலையான சொர்க்கமாக இருக்கும் அல்லது நிலையான நரகமாக இருக்கும்.”

ஒரு மனிதன் தொடர்ந்தும் மறுமை நாளை ஞாபகப்படுத்துபவராக இருப்பாராயின் அவரது உள்ளத்தில் தனது அனைத்து செயல்பாடுகளையும் வெளிப்படுத்தும் விசாரணை நாள் ஒன்றிருக்கின்றது என்ற எண்ணம் தொடர்ந்தும் இருக்கும். அது அவரது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் ஒவ்வொரு சொல்லிலும் தான் சம்பாதித்த ஒவ்வொரு நாணயத்திலும் தனது ஒவ்வொரு நகர்விலும் தனது ஒவ்வொரு ஸ்தம்பிதத்திலும் தனக்கும் மனிதர்களுக்கும் இடையிலான ஒவ்வொரு நடவடிக்கையிலும் தனக்கும் தனது இரட்சகனுக்கும் இடையிலான ஒவ்வொரு தொடர்பிலும் பிரதிபலிக்கும். ஹஜ் முழு மொத்த சமூகத்தையும் விழிப்படையச் செய்கிற பாரியதோர் அதிர்வாக இருக்கிறது. அது சிறு தூக்கத்திலிருந்து சமூகத்தை எழுப்பிவிடுகிறது. அது நீண்ட நாளாக மறந்திருந்த ஒன்றை அச் சமூகத்திற்கு ஞாபகமூட்டுகிறது.

ஒரு மனிதன் தான் விசாரிக்கப்பட இருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டால்..., ஊழலில் ஈடுபடுவானா?.. அநியாயம் இழைப்பானா? திருடுவானா? பெற்றோரை நோவினை செய்வானா? தனது மனைவி, பிள்ளைகள், அண்டை வீட்டார் அல்லது தனக்கு தெரியாத யாருடைய உரிமைகளிலேனும் அத்துமீறுவானா?.. திட்டமாக, இக் கேள்விகளுக்கான பதில் இல்லை என்பதாகவே அமையும். அவ்வாறே, இந்தபட பூமிப் பந்து சீர் பெறுவதென்பது விசாரனை நாளை ஞாபகமூட்டுவதிலேயே தங்கியுள்ளதென்பதை நாமறிவோம். எனவே, இவ் வசனத்தை அழுத்தமாக ஞாபகமூட்டி கொள்வோம். “இந்த பூமி பந்து சீர் பெறுவது விசாரணை நாளை ஞாபகமூட்டுவதிலேயே உள்ளது.”

கலாநிதி ராகிப் அஸ்-ஸிர்ஜானியுடைய ‘ஹஜ் ஹாஜிகளுக்கு மட்டும் அல்ல’(2006) என்ற புத்தகத்திலிருந்து.இப் புத்தகம் ஹஜ்ஜினுடைய நலன்கள் ஹாஜிகளுக்கு மட்டும் அல்ல ஹாஜியல்லாதவர்களுக்கும் உண்டு என்பதை மையமாகக் கொண்டமைந்திருக்கிறது. இது - ليشهدوا منافع لهم - “அவர்கள் (ஹஜ்ஜில்) இன்னும் பல நலன்களைக் கண்டு கொள்ள” என்ற ஹஜ் குறித்து பேசுகின்ற அல்-குர்ஆன் வசனத்தின் நிழலில் நின்று பேசப்படுகிறது. நூலசிரியர் ஹாஜிகள் பயன்பெறக் கூடிய ஹஜ்ஜினுடைய நலனாக வியாபாரத்தை மாத்திரம் சுருக்கி விடாமல், அதற்கு பகரமாக ஹாஜியல்லாதவர்களும் இணைந்தே பயன்பெறக் கூடிய மறுமை நாள் குறித்த ஞாபகமூட்டல், முஸ்லீம்களின் ஒற்றுமை, கட்டுப்பாடு போன்ற பல விடயங்களையும் தெளிவுபடுத்துகிறார்.கலாநிதி ராகிப் அஸ்-ஸிர்ஜானி (1964) எகிப்தை பிரப்பிடமாகக் கொண்டவர். அடிப்படையில் மருத்துவத் துறை சார்ந்தவர். எகிப்து கெய்ரோ பல்கலைகழகத்தில் பட்டம் பெற்றவர். 1998 மருத்துவத் துறையிலேயே கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளார். வரலாறு மற்றும் இஸ்லாமிய சிந்தனை சார் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். அதேநேரம், கெய்ரோ பல்கலைகழகத்தில் மருத்துவப் பீட பேராசிரியராகவும் கடமையாற்றி வருகிறார். முஸ்லீம் உலமாக்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின் உறுப்பினராகவும் உள்ளார். பன்நூல் ஆசிரியர். சமூக வலைத் தளங்களிலும் பல தலைப்புக்களில் இவரது நிகழ்சிகளை கண்டு கொள்ள முடிகிறது.



## றப்பானி

வெளியீடு - 02 | துல்ஹஜ் சிறப்பு மலர்

2023 தொகுதி நளீமீக்களால் (அபாபீல்) இச்சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +94 77 52 31 961 | mufarij012@gmail.com

விலை - 350/=